1153

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ௵ மே ௴ 8௳ [No. 19.

பொருளடக்கம்.

1.	தலையங்கம் (Leader).	361
2.	அப்பர் (யுத்தக்கலை) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L.	363
3	நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—4 பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L.	365
4.	இலஞ்சிப் பாவை (சிறைப்பட்ட சிற்றிடையாள்) T. S. நடராஜபிள்ளை. B A., B.L	367
5.	தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது)	369
6.	ஆச்சரிய சூடாமணி (கணையாழி அங்கம்) R. முத்தையர்	371
7.	கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L.	373
8.	குறுந்தொகை (பாட்டு 53—57) K. இராமரத்நம் ஐயர் B. A.	375
9.	வர்த்தமானம்	377

கலாநிலயம்

எத்தைக்கண்டு இச்சை கொள்வோம்!

தொழிற்சாலைகளுந் துறைமுகங்களுமே தமதுயிரிற்கு ஆதாரமென்று சுழன்று திரிகின்ற தேயங்களின் கதியெல்லாம் கடைசியில் முடியும் வகையினைக் கண்டுவருகின்றோம். வறுமையோ வறுமையென்று ஜர்மனியே இந்நாள் முறையிடுகின்றது. பெரிய யுத்தத்தில், பாழாகியதால் ஜர்மனி இந்நிலைக்கு வந்ததெனச் சிலர் எண்ணலாம். எனினும், அந்த யுத்தத்தைத் தூண்டிய மனத்தினை நோக்குங்கால், தொழிலும் வர்த்தகமும் சேர்ந்து கொழிக்கின்ற செல்வத்தின் நோக்கமே காரணம் என்பது தெரியவரும். யுத்தத்தால் ஒன்றும் இழந்ததில்லை ஆஸ்திரேலியா தேயம், சுயஆட்சி யுடையது. அந்நிய அரசாட்சியொன்று மதனை அழுத்திவைக்கவில்லை. அந்தத் தேயத்திற்குச்சென்றுவந்தவர், தொழில்வளர்ச்சியின்பொருட்டு அரசாங்கத்தினரும் மற்றுள ஜனங்களும் செய்துவருகின்ற முயற்சிகளைப் பலவாகப் பாராட்டக் கேட்டிருக்கின்றோம். பள்ளிக்கூடங்களிலெல்லாம், இந்நாட்டைப்போல் அங்கு வீண்பாடங்களைவைத்துச் சிறுவர்காலத்தையும் பொதுஜன நன்மையையும் பாழாக்காமல், கைத்தொழில்களும் அவைகளுக்குரியஇராசயன முதலியசாதனங்களுமே முதன்மையாகக் கற்பிக்கப்படுகின்றனவென்றும், நம்நாட்டு அரசியல்அதிகாரமும் நமது கையிலேயே இருக்குமாயின் அன்றோ நாமும் அவ்வாறு செய்து கடைத்தேறவோம்என்றும் சிலபிரசங்கங்கள் செய்துதாம். அயல்நாடு சென்றுவந்த கடமையைச் செலுத்திவிடுவதெல்லாம் இன்று என்னுயிற்று? வேலைகிடைக்காமல் ஆஸ்திரேலியாவில் ஜனங்கள் படுகின்ற கஷ்டத்திற் களவில்லை. வேலையில்லாது வறுமையால் வருந்துவார், செல்வவந்தர்களை வருத்துவார் என்றதோர் அச்சமும் அங்கு விளைந்திருக்கின்றது. எனின், இருதிறத்தோர்க்கும் துன்பமே தவிர வேறில்லை. ஜனங்கள் அங்குத் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்கின்றார். வேறெவர் நன்மைக்காகவும் அரசியல் நடத்தப்படுகின்றதென்னும் அபவாதத்திற்கு அத்தேய அரசாங்கம் ஆளாகாது. எல்லாமிருக்க ஏன் இவ்வறுமை!

ஜர்மனி கிடக்கட்டும், ஆஸ்திரேலியாகிடக்கட்டும். இங்கிலாந்து தேயத்தின் வாழ்வென்ன! சராசரி வருமானம் தலைக்குஇவ்வளவென்னும் கணக்கிற்கெல்லாம் அங்காந்துநிற்காமல் நிகழ்கின்ற செய்தியைப்பார்ப்போம். சிறிது காலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தால் அங்குளோர் அலைப்புண்ணும் வகையினை அனைவரும் பத்திரிகைகளில் பார்த்துக்கொண்டு வந்திருப்பார்களாதலால் நாமொன்று மதிகமாக இங்கு வரையவேண்டுவதில்லை. தொழிற்கட்சியினரே இப்பொழுது அரசியல்அதிகாரத்தில் இருக்கின்றனர் என்பதை மாத்திரம் நினைவூட்டினுற்போதும். வகுப்புப்பற்றியும் சாதிபற்றியும் மற்றுள வேற்றுமைகளைப்பற்றியும் அரசியல் அமைப்பில் "பிரதிநிதிகள் இருந்தாலன்றோ அவ்வவ் வினத்தார் யாதும் குறைவின்றிக் காக்கப்பெறுவர்," என்று கூறுதற்கும் வாயின்றித் தொழிற்கட்சியினர்ஆட்சியிலேயே தொழிலாளர்க்கே ஆபத்து வந்தது. இதனைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தார் செய்த

முயற்சிகளையும் அம்முயற்சியால் வேலையில்லா வறுமைநிலை எத்தூரம் செம்மையுற்றதென்பதையும் எல்லோரும் அறிவர். இந்நோய் இங்கிலாந்தில் இன்று தோன்றி நாளை மறைவதொன்றாகவுங் காணவில்லை. வெகு காலமாகவே அங்கு வேலையில்லாத் தவிப்பு ஒவ்வோரளவு இருந்துகொண்டே வருகின்றது. வீடு வாயிலில்லா வறியோர் கொடுமையும் வழிவழி அங்கு வளர்ந்து வருகின்றதென்பதையும், யாவரும் அறிவார். கோடிக்கணக்கில் பணம்வைத்துக்கொண்டு நாளொன்றிற்கு நானூறு ஐந்நூறு என்று செலவுசெய்வதால் தாம் அநுபவிப்பதாக எண்ணிக்கொள்கின்ற போகத்தைப் பெறுபவர்தம் தொகையைக்கொண்டு, ஒரு நாட்டின் நிலைமையையேனும் பெருமையையேனும் மதித்தலாகாது. பதினாயிரத்தில் இத்தகையவன் ஒருவன் இருக்கின்ற நாடும் ஒன்றுதான்; பத்துப்பேர் இருக்கின்ற நாடும் ஒன்றுதான்; நூறுபேர், ஆயிரம், ஐயாயிரம்பேர் இருக்கின்ற நாடுகளும் ஒன்றேதான். இவர்களொழிக்க மற்றவர் இருக்கும் நிலை என்னென்றுநோக்கியே முடிவுகூறவேண்டும். ஆயிரம் பேரில், ஐம்பதுபேர் செல்வமுடையவர்களாயிருக்கின்றாரெனில், இவ்வைம்பதுபேர் செல்வவந்தர்களான விதம் என்னென்று ஆராய்ந்து அறிந்துகொள்வது பேராசை யுடையவர்களுக்குப் பயனளிக்கலாமெனினும், உலகிற் கொருநன்மையும் அதனால் உண்டாவதற்கில்லை. எஞ்சிய தொள்ளாயிரத் தைம்பதுபேர்களில் பசியால் வருந்தாதவர்கள் எத்தனைபேர் என்பதையே எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களில் பத்துப்பேரேனும் அன்றன்று வாழ்விற்கும் அல்லலுற்றிருப்பாரெனில், பின் அந்நாடும் அதன் தொழில் முறையும் தனதாயசாஸ்திரங்களும் அரசியலும், பெருமையொன்றும் பேசிக்கொள்ளாமல் ஏழைகளுக்கு ஏற்ற விடையே பகரக் கடமைப்பட்டிருக்கின்றன. ஜனத்தொகை அதிகமும் பெருகிவிட்டதென்றும், இச் சனத்தொகைக்கு நேராக உணவுப் பொருள்கள் விளைவதில்லையென்றும் காரணம் காட்டி, "ஆகையால் கர்ப்பத்தடைமுறைகளால் ஜனத்தொகையைக் குறைக்கவேண்டும்" என்ற வழியை வாய்க்கெளிதாகக் கூறுமுன், இந்நிலைக்கு உரித்தாய மனப்பான்மையை மயங்காமல் உணர்வது நலம். பொருளாதார சாஸ்திரத்தை ஆதாரமாகநம்பி, மக்கள் இனிப் பிறக்கப்படாதென்பதற்கும், பிறந்திருக்கும் மக்களைக் கொன்றுவிடவேண்டுமென்பதற்கும், சட்டத்தினலன்றி, சிந்தனையிலேனும் கொள்கையிலேனும் அதிகமும் பேதமில்லையே. விளைந்த உணவினை எல்லாம் பகிர்ந்துண்டபின் எஞ்சியவர் இருப்பாராயின் அன்றுசென்று ஜனத்தொகைக்கணக்கைச் சோதிக்கலாமே.

ஆதலின், இங்கிலாந்து தன்னுடைய ஏழைகளுக்கு என்ன விடை தரக்கூடுமென்று ஊகிப்பது அருமை. ஜனங்களுடைய நன்மைக்கு அயலாய நோக்கமுடைத்தன்று அதன் அரசியல். அவ் வரசியல்முறையோ புதியதன்று. ஜாதிமத பேதங்களாலும் பழைய வழக்கக்கொடுமைகளாலும், மூடபக்தியாலும், தீண்டாமையாலும் இளவயது விவாகங்களினாலும் ஆள்வதற்குரியவரல்லார் கையிலே அரசியல் இல்லை. தம் பணத்தைத் தேசத்தின் நன்மைக்காகப் பயன்படுத்தாமல், கோவிலென்றும் மடமென்றும் பிரார்த்தனை யென்றும் கட்டிச் செலவுசெய்துவிடுவார் நம்நாட்டுத் தொல்குலப் பெரியோரெனின்—இங்கிலாந்தின் பணமெல்லாம் தொழிற்சாலைகளிலும் கப்பல்களிலும் கடைத்தெருவுகளிலும் புரள்கின்றதே. தொழிற்சாலைகளினின்று எழும் கரும்புகையினால் இருண்ட அத்தேயத்தில் வேலை வேண்டுவோரும் வறுமை பூண்ட பேரும் இருப்பதன் காரணம் யாது?

இதனால், செல்வமே சுகத்திற் காதாரமென்று நாம் கருதுகின்றோம் எனக் கொள்ளவேண்டா. வறுமை என்பது ஓர் உள்ளத் துணர்ச்சியாதலால் வருவாய்க்கும் அதற்கும் யாதும் தொடர்பில்லை என்பதையும் அறிவோம். ஆயினும், ஒரே தேயத்தின் முன்னேற்றம் அதன் சராசரி வருமான அளவையைப் பொருந்தியிருப்பதாக விவகரிக்கும் இக்கால மதியினை நேரிதென்று கொண்டாலுங்கூட, இறுதியில் எச்சுகத்தையும் எய்தக்கண்டிலோம் என்பதையே இங்குக் காட்ட முயல்கின்றோம். இந்திய ஏழைகளைக்காட்டித்தொழிற்சாலைகளைக் கணக்கின்றி நிறுவுவதே அவர்களுக்குச் செய்வதற்குரிய உதவியென்று மன்றாடுவார், இங்கிலாந்தின் நிலைக்கு இவ்விந்தியாவைக் கொண்டுவருவதே கருமமென்றுசாற்றுகின்றார்களல்லரோ! வாயாற் சாற்றுமுன் ஒன்றினைக் கண்ணால் காண்பது நன்மதியாகும். தொழிற்சாலைகள், கன்மனத்தையும், இருண்ட எண்ணங்களையும், வர்த்தக வஞ்சனையையும், ஆன்ம சூன்யத்தையும், நகரத்தெவிட்டும் சிற்றின்பங்களையும், சுயநல சிந்தனையையும், க்ஷயநோயையும் இவையனைய எண்ணிறந்த தீமைகளையுமே நாளுக்கு நாள் வளர்த்து வாழ்க்கையை உழக்கித் திரியலாகுமேயல்லாது, ஏழ்மை என்பதைத் துடைப்பதற்குங்கூட எள்ளளவும் உதவாது என்பதை உணர்ந்தக்கால் நமது ஏழைகளை உய்விக்கும் நாள் ஒருவாறு வந்தெய்தியதென நினைக்கலாம்.

இது வொன்றும் புதியதன்று. கார்லைல், ரஸ்கின் முதலிய பொய்யில்காட்சியர் பலர் முன்னரே முறையிட்டிருக்கின்றனர். அவர்களது வாக்குப் பொய்க்காதென்பதையே இக்கால நிகழ்ச்சிகள் காட்டித்தருகின்றன. சொற்றொடர்களுக்கு அடிமையாகி ஆரவாரங்கள் புரிவதனினும் அச் சொற்றொடர்கள் வளர்த்திருக்கும் வாழ்வினைச்சற்று நோக்கினாற்றான் ஆகாதோ! மேனாட்டார் பொதுவாழ்க்கையில் நாம் எதனைக்கண்டு இச்சை கொள்வதென இதுகாறுந் தெரியவில்லையே! இன்னபடி எம்மோடு எண்ணுவார் சிலர் இருக்கின்றனர் எனினும் அன்னவர்களினும் பெரும்பகுதியோர் அம்மேனாட்டு முறைகளையே பின்னும் பாராட்டிப் பேசுவதன் பொருள் விளங்கவில்லை. ஏழைகள் ஏழைகளாகவே இருக்கின்றனர். பணக்காரர்களோ அவர்கள் ஈட்டிய பொருளினோடு சுகமேனும் பெருமையேனும் ஈட்டினவர்களாய் நினைக்கவோ இடமில்லையே. எனின், இங்கிலாந்திலுள்ளவர்கள் என் நினைத்து என்ன செய்கின்றனர்; அதனைக்கண் டங்காந்து நிற்பவர் கதிதான் யாவதாகுமோ.

அப்பர்

8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[344-வது பக்கத் தொடர்ச்சி]

V. வாகை.

வாகை யென்பது வெற்றிக்கு அறிகுறியாய் அணியும் ஒருவகைப் பூ. இது பாலைநிலத்தில் பூப்பது:—

ஓமையன கள்ளியன வாகையன கூகைமுரலோசை
ஈமமெரி சூழ்சுடலை வாசமுது காடுநட மாடித்
தூய்மையுடை யக்கொடர வம்விரவி மிக்கொளி [துளங்க
ஆமையொடு பூணுமடி கள்ளுறைவ தவளிவணலூரே
சம்பந்தர்.

வாகைத்திணையைப் பாலைத்திணைக்குப் புறனென்பர்.

வாகை தானே பாலையது புறனே
தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்த லென்ப.
இலக்கண விளக்கம் 612.

வாகை பல துறைகளை யுடைத்து. வெற்றியடைந்த மன்னன் எவ்வாறு எவ்வெவ்வகையால் விளங்குவானென்பதைக் குறிக்கும். அவற்றுள் சிலவற்றைத் தேவாரவாயிலாய்க் காண்போம்:—

அறுவகைப்பட்ட பார்ப்பன வாகை.

அன்றினவர் புரமூன்றும் பொடியாய் வேவ
அழல்விழித்த கண்ணானை யமரர் கோனை
வென்றிமிகு காலனுயிர் பொன்றி வீழ
விளங்குதிரு வடியெடுத்த விகிர்தன் றன்னை
ஒன்றியசீ ரிருபிறப்பர் முத்தீ யோம்பு
முயர்புகழ்நான் மறையோமாம் புலியூர் நாளும்
தேன்றன்மலி வடதளியேஞ் செல்வன் றன்னைச்
சேராதே திகைத்துநாள் செலுத்தி னேனே.
திருவோமாம் புலியூர் - திருத்தாண்டகம் 4.

ஐவகை மரபி னரசவாகை

காவ லமைந்தான் கடலுலகம் காவலா
லோவ லறியர் துயிர்க்குவகை—மேவருஞ்சீ
ரைந்தொழி லொன்மறை முத்தீ யிருபிறப்பு
வெந்திறற் றண்ணளியெம் வேந்து.

தேவார உதாரணம்:—

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகோள் கோவண வாடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே.

மலையி னீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ண வுருவரோ
தொலையி லாக்கத வந்துணை நீக்குமே.
திருமறைக்காடு - திருக்குறுந்தொகை 4, 5.

"மன்னனையுழவனெனு மறக்கள வழியின்" உருவகம்

மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல்போன் மேனி முதல்வன் கண்டாய்
ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் மண்ணல் கண்டாய்
வாரி மதக்களிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே.
திருமறைக்காடு - திருத்தாண்டகம். 5.

வென்ற வேந்தன் மீளியந் தேர்முன்
நின்ற பேயுட னிகழ்த்திய குரவை.

இதன் உருவகம் தேவாரத்தில்,

வேடனாய் விசயன்றன் வியப்பைக் காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய வேனத் தின்பின்
கூடினா ருமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி யுடன்கோத்துக் கோரப் பூசல்
ஆடினார் பெருங்கூத் துக் காளிகாண
வருமறையோ டாறங்க மாய்ந்து கொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்த வாறே.
திருப்பாசூர் - திருத்தாண்டகம் 5.

VI. காஞ்சி.

காஞ்சியென்பது "வருபடை நோனான் மடுத்தெதிரூன்றக்கருதிவேலுழவன்" சூடும் ஒருவகைப் பூ. மாற்றார் படையெடுத்துவரின், அதைத் தடுக்கு நிமித்தம் செய்யும் செய்கைகள் காஞ்சித்திணையின்பாற் படும். அது இருபத்தைந்து துறைகளுடையது. இது பெருந்திணைக்குப் புறனென்பர்.

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கரு சிறப்பிற் பல்லாற் றானு
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே.
இலக்கண விளக்கம்.

இது பற்பல வுருவகங்களாய்த் தேவாரத்தில் வரக் காணலாம்.

I "மேல்வரு படைவர விறன்மிகுத் தெதிர்தல்"

மடக்கினார் புலியின் றோலை மாமணி நாகங் கச்சா
முடக்கினார் முகிழ்வெண் டிங்கள் மொய்சடைக் [கற்றை தன்மேல்
தொடக்கினார் தொண்டைச் செவ்வாய்த் துடியிடைப் [பாவை யல்குல்
அடக்கினார் கெடில வேலி யதிகைவீ ரட்ட னாரே.
திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை 1.

II. "வந்து புலத்திறுத்தோர் வரம்பு கடவாமைத்
தந்தங் கடவை தழீஇய தழிஞ்சி":—

அஞ்சினா லியற்றப் பட்ட
வாக்கைபெற் றதனுள் வாழும்
அஞ்சினா லடர்க்கப் பட்டிங்
குழிதரு மாத னேனை
அஞ்சினா லுய்க்கும் வண்ணங்
காட்டினாய்க் கச்சந் தீர்ந்தேன்

அஞ்சினுற் பொலிந்த சென்னி
யதிகைவீ ரட்ட னீரே.

திருவதிகை வீரட்டானம் - திருநேரிசை 5.

III. படுசுடரிமைக்கும் படைக்கலம் வழங்கல்.

பொருண்மன் னனைப்பற்றிப் புட்பகங் கொண்ட
மருண்மன் னனையெற்றி வாளுட னீந்து
கருண்மன் னுகண்டங் கறுக்கநஞ் சுண்ட
அருண்மன்ன ராரூ ரரநெறி யாரே.

திருவாரூர்அரநெறி-திருக்குறுந்தொகை 11.

தொடருந் தொண்டரைத் துக்கந் தொடர்ந்துவந்
தடரும் போதா னுயருள் செய்பவர்
கடலி னஞ்சணி கண்டர் கடிபுனல்
படருஞ் செஞ்சடைப் பாலைத் துறையரே.

திருப்பாலைத்துறை- திருக்குறுந்தொகை 8.

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட
பன்மலரு நறும்புகையும் பரந்து தோன்றும்
சீராழித் தாமரையின் மலர்க ளன்ன
திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்
ஓராழித் தேருடைய விலங்கை வேந்தன்
உடல்துணித்த விடர்பாவங் கெடுப்பித் தன்று
போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்
பொழிறிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

திருப்பூவணம்-திருத்தாண்டகம் 6.

சொல்லானைப் பொருளானைச் சுருதியானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய் தானை
அல்லானைப் பகலானை யறியான் றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன் றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய் தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பி யேத்தும்
நல்லானைத் தீயாடு நம்பன் றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே.

திருநாரையூர் - திருத்தாண்டகம் 1.

IV. மன்னவ ரிகல்மற மடங்கவே லிறைவன்
முன்னிருந் தருமுனை முரித்த முன்னிருப்பு.

தலையவனா யுலகுக்கோர் தன்மை யானே
தத்துவனாய்ச் சார்ந்தோர்க்கின் னமுதா னானே
நிலையவனாய் நின்றொப்பா ரில்லா தானே
நின்றுணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே கொல்யானைத் தோன்மே லிட்ட
கூற்றவனே கொடிமதில்கண் மூன்று மெய்த
சிலையவனே திருச்சோற்றுத் துறையு ளானே
திகழொளியே சிவனேயுன் னபய நானே.

திருச்சோற்றுத்துறை - திருத்தாண்டகம் 2.

VII. பாடாண்டிணை

தேவாரத்தில் பெரும்பகுதி பாடாண்டிணைக்கே உதாரண மென்னலாம். பாடாண்டிணையாவது பாடுதற்குரிய ஆண்மகனது ஒழுக்கத்தைப் பாடுகின்ற முறையிணையுடைத்து. இது கைக்கிளைக்குப் புறனென்பர்.

பாடாண் டிணையே கைக்கிளைப் புறனே
பாடுதற் குரிய வாடவன் றனது
பாடமை யொழுக்கம் பாடுமந் நெறித்தே.

இலக்கண விளக்கம் 616.

இது நாற்பத்தொன்பது துறைகளையுடையதாம். அவையாவன:—

ஒளியு மாற்றலு மோம்பா வீகையு
மளியு மென்றிவை யாய்ந்தினி துரைத்தலுஞ்
சேய்வரல் வருத்தம் வீட வாயில்
காப்பவர்க் குரைத்த கடைநிலை யானுங்
காவல் கண்ணிய கழலோன் கைதொழு
மூவரி லொருவனை முறையுளி வாழ்த்தலு
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற்
றூவா விழுப்புகழ்ப் பூவை நிலையு
மொருவனை யவனொடு மொழிந்தவா னவரொடும்
பொருவினன் புகழ்ந்த மற்றதன் பகுதியு
மண்ணகங் காவன் மன்னவன் முன்ன
ரெண்ணிய பரிசி லிதுவென வுரைத்தலு
மின்னோ ரின்னவை கொடுத்தனர் நீயு
மன்னர்போ லருள்கெனு மியன்மொழி வாழ்த்து
மயலறு சீர்த்தி மான்றோர் மன்ன
னியல்பென மொழியு மத்துறைப் பகுதியு
நெடுந்தேர்த் தானை நீறுபட நடக்குங்
கடுந்தேர் மன்னவன் கண்படை நிலையு
மயில்வேன் மன்னனை யருளிய வெழுகெனத்
துயிலெடை யெடுப்பிய துயிலெடை நிலையுங்
கங்குற் கனைதுயி லெழுந்தோன் முன்னர்
மங்கலம் கூறிய மங்கல நிலையு
மன்னிய சிறப்பின் மங்கல மரபிற்
றன்னின னென்ற வத்துறைப் பகுதியுந்
துளக்கமி லரசன் வெற்றி காட்டும்
விளங்குநிலை விளம்பிய விளக்கு நிலையு
மடாவிர் பைம்பூ ணரசன் றன்னைச்
சுடரொடு பொரூஉ மத்துறைப் பகுதியு
மூவகையொடு வேந்த னெலிமறை யவர்க்குக்
கபிலை யீந்த கபிலை நிலையு
மந்தமில் புகழா னமரரவி முகப்ப
வெந்தீ வேட்ட வேள்வி நிலையு
மண்மிசைக் கொண்மூ மழைவளந் தருமென
விண்மிசைத் தோற்றிய வெள்ளி நிலையுந்
தாட்டாழ் தடக்கைத் தாம மார்ப
னாட்டுவள னுரைத்த நாடு வாழ்த்தும்
வாழ்மனை புகீஇ வைகறை முழங்கிய
கேழ்கிளர் கிணைவன் கிளந்த கிணைநிலையுஞ்
செங்களத் திட்டிய செல்வம்வெண் டுறையாழ்
மங்கலப் பாணர் மறுத்த களவழியுங்
கூற்றிருந் தாலுங் கொலைவேன் மன்னவன்
வீற்றினி திருந்த பெருமங் கலமு
நெடுமதி லெறிந்த நிரைதார் மன்னன்
குடுமி களைந்த புகழ்சாற்று நிலையும்
இகலடு தடந்தோ ளெறிவே லிறைவன்
மகளிரொடு மணந்த மணமங் கலமும்
கதமிக் கெழுபடைக் காவல் வேந்தன்
புதல்வற் பயந்த பொலிவுமங் கலமும்
வாட்படைத் தானை மன்னவன் பிறந்த
நாட்சிறப் புரைத்த நாண்மங் கலமும்
விரைந்துகொடை பெற்றம் விடைபெறு திரவலன்
பரிந்துகடைக் கூட்டிய பரிசி னிலையும்
வண்புக ழுறைந்தோர்க்கு மன்னவ னுதவிப்
பண்புற விடுத்த பரிசில் விடையு
நிறைவினை முற்றிய நீள்கழ லோன்மனை
யறன்மலி புரைத்த வாள்வினை வேள்வியுங்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு
மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்

சென்றெதிரத் தெரித்த வாற்றுப் படையு
மொழியுமெங் கடுஞ்சொன் முறையுளி நிற்பின்
வழிபயன் படூஉமெனும் வாயுறை வாழ்த்தும்
புரையோர் நாப்பண் வீதல் கடனெனப்
பெரியோர் பேணிய செவியறி வுறாவு
நாற்பெருந் திசையு நன்கினிது கவித்த
கோக்குடை பழிச்சுங் குடைமங் கலமும்
காய்வார் காயக் கன்கனல் வேந்தன்
வாய்வா ளேத்திய வான்மங் கலமும்
எண்ணருஞ் சீர்த்தி யிறையோ னெய்தி
மண்ணுதல் புரிந்த மண்ணு மங்கலமு
மறிவோர் வேந்தனுக் காய்ந்திவை செய்கென
வுறுதி கூறிய வோம்படை நிலையும்
வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பொலிமி னென்னும் புறநிலை வாழ்த்து
மூவர் கொடியுளு மொன்றொடு பொரீஇ
மேவர வுரைத்த வியன்கொடி நிலையுஞ்
சோவினை யழித்த துளவணி மாயோன்
மேவரு விறலினை வியந்த கந்தழியு
மெரிசுடர் வேலவர்க் கிளகிய வுள்ளத்
தரிமலர்க் கண்ணிய ராடிய வள்ளியும்
விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முழை
யரும்பெறற் புலவரை யாற்றுப் படுத்தலும்
வீற்றதொன் றெய்துகம் வியனிலத் தியாமெனப்
போற்றரு மிறைக்கெதிர் புகழ்ந்தனர் பரவலும்
விடுசுட ரெறிக்கு மேனிவா னவனைப்
படுபயன் கருதிப் பழிச்சினர்ப் பணிதலு
மருமலர்க் கோதை மடவா றலைவனை
விரிமலர்த் தாமம் விழைந்தகைக் கிளையு
செல்பவள் செல்வகை தெரிந்தபெருந் திணையும்
வில்லேர் நுதலி விறலோன் மார்பும்
புல்லேம் யாமெனப் புலந்த புலவியும்
படிமிசை யியங்காப் பணிமொழி மகளிர்
கடவுளை நயந்த கடவுட் பக்கமும்
பூதலத் தரிவையர் பொருவில்வா னவரைக்
காதலித் துரைத்த கடவுட் பக்கமு
னெழுயணி மங்கைய ரீறல காமங்
குழவி மருங்கிற் கூறிய பகுதியு
நீங்காக் காதன் மைந்தரு மகளிரும்
பாங்குறக் கூடும் பதிநிலை யுரைத்தலு
மெனமுறை தொகுத்த வேழேழ் துறையும்
வினவிய பாடாண் டிணையது விரியே.

இலக்கண விளக்கம் 617.

நம்மாழ்வார் வைபவம்.

திருவாய்மொழி.

[348-வது பக்கத் தொடர்ச்சி]

முதல்பத்து—நாலாம் பதிகம்

4-ம் பாசுரம்.

என்நீர்மை கண்டிரங்கி
இதுதகா தென்னாத
என்நீலமுகில் வண்ணற்கு
என்சொல்லி யான்சொல்லுகேனோ
நன்னீர்மை இனி அவர்கண்
தங்காது என்று ஒருவாய்ச்சொல்
நன்னீல மன்றில்காள்!
நல்குதிரோ நல்கீரோ?

குறிப்புகள்:—நன்னீர்மை - நல்ல உயிர்-நீரும் கூட வெகுமானிக்கத்தக்க உயிர். "அவர்" என்ற பகுவசனம் நாயகியை. அன்றில்கள் கூறவேண்டிய பிரகாரமாக உரைத்தபடி. ஆறுயிரப்படியின் பொருத்தமான பொழிப்புரையை வரைவோம். "நான் தம்மைப் பிரியில் ஒரு க்ஷண மாத்திரமும் தரிக்கமாட்டாத ஸ்பாவத்தை யுடையவளென்று அறிந்துவைத்து என் பக்கலிலே கிருபை செய்து "இவள் நம்மைப் பிரிந்திருக்கைக்கு ஈடல்லள்" என்று பாராதவருக்கு நான் என்னவார்த்தையைச் சொல்வதென்று எம்பெருமானை யின்னாதாய்ப்பட்டுப் பின்னையும் அவனைவிடமாட்டாமையாலே அவளுடைய நல்லுயிரானது இனி அவள் பக்கல் ஒரு க்ஷணமாத்திரமும் தங்காதுஎன்று ஒரு வார்த்தை சொல்லவேணுமென்று சில அன்றில்களைநோக்கிச்சொல்ல அவைகளும் போகாதிருந்தவிடத்து "இத்தனையும் சொல்ல வல்லீர்களோ மாட்டீர்களோ" என்கிறாள்.

குறிப்புகள்:-அன்றில்கள் செய்யும்ஆலஸியம் "இஷ்டக்குறைவா, பயமா, யோசித்துச் செய்யவேண்டுமென்பதா, சக்தி யில்லாமையால் வந்த பேடியா" என்றுஉணரக்காக்காமல் வேறேதூதாவது அனுப்பலாமென்றஅவசரத்தின் நிமித்தம் கண்டித்துக் கேட்கிறபடி. ஒவ்வொரு பாசுரத்திலுமடங்கிய தூதில் வேறுவேறு ரசம் இருப்பதை முயன்று படிப்பவர்கள் அறிவார்கள். அழகிய நீலமுகில் வண்ணருக்கு அழகிய அன்றில்கள் தூதாவது வெகு பொருத்தமே!

5-ம் பாசுரம்.

நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் [வினையேற்கே
நல்கத்தா னாகாதோ நாரணனைக் கண்டக்கால்
மல்குநீர்ப் புனற்படப்பை இரைதேர் வண்குருகே
மல்குநீர்க்கண்ணேற்கு ஓர் வாசகம் கொண்டருளாயே.

குறிப்புகள்:—"ஆகாதோ" என்ற சொல்லின் இறுதி "ஓ" காரம் "வினையேற்கே'யோ' என்று சேர்ந்து "நல்கத்தா னாகாது" என்று அந்வயமாக்குக. "நாரணன்" சப்தம் 'கிருபை" "அபராதஸஹத்துவம்" முதலிய "நாரங்கள்" - கல்யாணகுணங்களை யுடையவன் என்கிற பொருளில் இப்பாசுரத்தில் வந்திருக்கிறது. "வாசகம் - பூஜாவசனம், அருள்". நாரணனுடைய விடையாகையால் அதைத் தாங்கிக்கொண்டுவருகிற குருகின் உரையை வெகுமானித்துக்கூறியபடி. எல்லா உலகங்களிலுமுள்ள "ஸர்வாத்மாக்களுடைய ஸர்வ அபராதங்களையும் பொறுத்தருளி யவர்களுடைய அநிஷ்டங்களையெல்லாம் போக்கி ஸ்நேஹமாக ரக்ஷித்தருளுகிற பரம காருணிகனை எம்பெருமானுக்கு நான் செய்தபிழையைப் பொறுத்து என்னோடுகலந்து பறிமாறவேயோ ஆகாது என்று சொல்லி,

பின் அவன் அருள்செய்யும் வார்த்தையைக் கொண்டு வந்து எனக்குச் சொல்ல வேணுமென்று, நீர்ப் பிடிப்படுத்த நிலங்களில் குஞ்சுகளுக்கு இரைதேடுகிற, (பிறர்க்குதவும் நற்குணங்கள் பொருந்திய) சில குருகுகளை இரக்கிருள்''—ஆறுயிரப்படி உரை.

குறிப்பு:—அவனது கல்யாணகுணங்களில் இந்தப் பிராட்டிக்கு முக்கியமாய்த் தற்காலம் உதவுவது "அபராத ஸஹத்துவம்''. இவ்வேழுலுகங்களிலும் அவனிடத்தில் அபராதப்பட்டவர் எத்தனை பேர்கள் இல்லை. அந்தோ! யான் மாத்திரமோ பொறுக்க ஒண்ணுத பிழைகள் இயற்றினவள்? அவன் கண்ணோட்டமன்றோ ஸர்வருக்கும் பற்றுக்கோடு. அவனது மேம்பாடான கருணைக்கு என் அபாராதம் ஓர் தடையோ. ஆகையால் அவன் விடை அளிப்பன் - அதைக் கொண்டுவந்து "அருள் செய்'' என்கிருள்.

6-ம் பாசுரம்.

அருளாத நீர் அருளி அவர் ஆவி துவராமுன்
அருளாழிப் புட்கடவீர் அவர்வீதி ஒருநாளென்று
அருளாழி யம்மானைக் கண்டக்கால் இதுசொல்லி
அருள் ஆழி வரிவண்டே யாமும்என் பிழைத்தோமே?

பதவுரை.

ஆழிவரி - சுழல்போல் சக்கரங்களான புள்ளிகளுடைய வண்டே. அருள் ஆழி அம்மானைக்கண்டக்கால்- கிருபாவசியரான சுதர்சன ஆழ்வாரைத் தரித்துக் கொண்டுஇருக்கிற எம்பெருமானைக் கண்டவளவிலே, அருளாத நீர் - இதுவரையில் என்னோடு கலக்கத் திருவுள்ளத்தில் கிருபையில்லாத நீர், அருளி - ஒருவாறு கிருபைசெய்து, அவராவி துயராமுன் - விரஹத்திலகப்பட்டு வருந்துகிறவள் இறக்குமுன்னர், அருளாழிப்புள் - கிருபாசமுத்திரம்போல் விளங்கும் பக்ஷிராஜனை கருடனை, ஒரு நாள் (தினம்வேண்டா) ஒரே ஒருநாள், அவர் வீதி-அவள் வசிக்கும் வீதியிலாவது, கடவீர் - ஊர்ந்து எல்லாரும் காண்பதற்கு நடத்திச் செல்லவேண்டும். யாமும்-நாங்களும், என் பிழைத்தோம் - என்ன பிழை செய்தோம் என்ற இரண்டு வார்த்தை மாத்திரமே, என்றிது-இந்தச் சுருக்கமான செய்தியை, சொல்லியருள் - சொல்லக் கிருபை செய்வாய்.

குறிப்பு:—இப்படி உயிரே போய்விடுவதுபோல் உள்ள எனது விரஹ தெசையிலும் அளிகாட்டாத நாயகன், நான் அபேக்ஷித்ததினுல் வரப்போகிருனென்று வண்டுகள் கேட்டதாகக் கொண்டு, அவ்வளவுதான் உமக்குக் கிருபைஇல்லையாகிலும் அவளிருக்கும் தெருவழியாவதுகருடன்மீதேறிவந்தாலாகாதோ "என்ன பிழைத்தோம்'' என்ன இரண்டு வார்த்தைகள் கேளுங்கோளென்று வண்டுகளை இரங்கிக் கேட்கிருள். ஆழி - ஒரு கிருபாமூர்த்தி; கெருடனே, கிருபையாகிற ஆழ்ந்த கடல், இங்ஙனம் உள்ளவர்களோடு நித்திய ஸம்ஸிலேஷம் (உள்கலப்பு) உள்ளவன் எப்படிக் கிருபைசெய்யாது ஒழிவன். ஆகையால் வண்டே நீ தைரியமாகச் செல், காரியஸித்தி உண்டு, என்கிருர்.

7-ம் பாசுரம்.

என்புஇழை கோப்பதுபோல் பனிவாடை ஈர்கின்ற
என்பிழையேநினைந்தருளி அருளாததிருமாலார்க்கு
என்பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கென்று
[ஒருவாய்ச்சொல்
என்புஇழைக்கு மிளங்கிளியே யான்வளர்த்த
[நீயலையோ

குறிப்பு:—இவ்வாறு பலபக்ஷிகளைத் தூதுவிட எத்தனித்தும் காரியம் ஸாதிக்க ஏலாததினுல் தான் வளர்த்த கிளியைத் தூதுசெல்ல ஏவுகிருள்.

என்பு இழைக்கும் - உன் வர்ணத்தாலும் அழகாலும் அவனது திருநாமத்தை ஸதா கற்பித்தபடியே மொழிவதாலும், விரஹதெசையைஎப்போதுமுணர்த்தும் இளங்கிளியே, யான் வளர்த்த நீயலையோ - நீ வளர்க்கப்பட்டவளல்லளோ. ஆகையால் நீ எனக்குத் தூதுபோக உரிமைப்பாடு உள்ளவள். என்பு இழை கோப்பதுபோல் - எலும்பில் நூலை ஊசியால் கோத்தாப்போல், பனிவாடை - குளிர்ச்சியான வாடைக் காற்று, ஈர்கின்ற - நலிகின்ற இந்தச் சமயத்தில், என் பிழையே நினைந்தருளி - என் பிழையையே மனதில் வைத்துக்கொண்டு, அருளாத திருமாலார்க்கு - பிழையிருப்பின் அதை க்ஷமிக்காத திருமாலார்க்கு, திருவடியின் தகவினுக்கு - உமது தயவுக்கு ஸஹிக்கக் கூடாதபடி என்பிழைத்தாள்-என்ன அபராதத்தைச் செய்தாள், என்று -என்று, ஒருவாய்-வார்த்தை, சொல் - சொல்லாய் கிளியே.

குறிப்பு:—இலக்குமியின் ஸந்நதியில் சொன்னுல் கடாக்ஷதரனை திருமால் அவசியம் நம்மை ஏற்பானென்று கிளிக்குத் தைரியம் சொன்னபடி. அவனது க்ஷமை, அதாவது அபராத ஸஹத்துவம் மஹா பெரிது. எனது பிழை இருந்தால் வெகு சிறிது, அவனது தகவு ஸர்வ உலகத்தாரையும் பொறுத்து அளிக்கக் காத்திருக்க யான் ஏதேனும் பிழைசெய்திருந்தால் தம் பெருந்தகவுக்கு அது ஒரு விஷயமோ? அவன் பொறுக்காத ஒரு பிழையும் உண்டோ?

அகராதிகள்.

	ரூ.	அ.
தமிழ்ச்சொல் லகராதி (உதாரணங்களுடன்)—மூன்று பாகம் ...	18	8
தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary	10	0

தமிழ் - தமிழ் - இங்கிலீஷ் அகராதி.
வி. விச்வநாதபிள்ளை இயற்றியது :: 676 பக்கங்கள்
எல்லாப் பதங்களுக்கும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு சொல்லுக்கு மிருக்கிற பல பொருள்களும் அவைகளுக்கு நேர் நேரே ஆங்கில மொழிபெயர்ப்பும் கொண்டது.
விலை ரூபா 6 0 0.

வி. பி. செலவு வேறு.

விலாசம்:—"கலாநிலயம்" 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

இலஞ்சிப் பாவை.

[333-வது பக்கத் தொடர்ச்சி]

13. சிறைப்பட்ட சிற்றிடையாள்.

ஓடியவாங்கேமரீசி ஏவிய அம்பினின்றுய்ந்த விஜபன், எரியெழு முள்ளத்தனுய்க் காற்றினுங் கடுகியோடி அக்கொடியோன் தன்நண்பரைக்கூடுமுன்னர், அவனை வாளால் வெட்டி வீழ்த்தினுன். நிலமிசைக் கிடந்த நீளுருவத்தை அவ்வீரன் சற்று நோக்கினனுய் யமன் வாயினின்றும் தாளின்று மீண்டதை யுன்னச் சிறிது முறுவலித்து, மெய்வழி யுதிரஞ் சிந்தக்கிடந்த மங்கையர்க்கரசியை நண்ணி நடந்தான்.

இதற்குள் அவளும் பெரியதொரு புன்னைமரத்தடியில் அமர்ந்து, முழங்கையைக் காலின்மேலூன்றி, தன்னுகத்துட் தைத்தவவ் வம்பினைப்பறித்தனள், கையினில் ஏந்திநோக்கி மிகமிக நகைத்தனள். தூசுகோலுஞ் சிறகுமாய்ச் சேர்த்துப் பின்னிய பிணையல், கீழ் வீழ்ந்து சோரியில் தோய்ந்திருந்தது. பொழிகின்ற புலானீரைநிறுத்த விஜபன் முயன்றதெல்லாம் பயனிலவாயின. அதுகண்டு அவளும் விஜயனை நோக்கிச் சில சொற்கள் விளம்பலாயினுள். "ஆவிபோம் வேளையில் அறிவுதந் தருளிப அந்நியனே! உன் வீண் முயற்சிகளை விட்டுவிடு யான் இனிப் பிழையேன். இதோ ஓடும் செந்நீர் என் உள்ளத்திருந்த பித்தையும் வெளிப்படுத்திவிட்டது. ஆதரவற்ற பேதையாய் அவமே இறக்கின்றேன். என்னுடலைப் புதைக்கவும் உற்ரு ருறவின ரிங்கில்லை. யா னிறந்தபின் நீ யிவ்விடம் நில்லாதே. யாரோ உயர்குலத்தவனைப் போல் தோற்றுகிருய் நீ. என் பழி இதுதீர்க்கவே இவ்விடம் வந்தனைபோலும். இதோ பார்! இப் பொன் சங்கிலி யாருடையதென்றும், அது எச்சமயம் எனக்குக் கொடுக்கப்பட்டதென்றும் பலபட வெடுத்துச் சொல்லி, உன்னை வருத்தப்படுத்த இது நேரமன்று. துயரிலும் பிரிவிலும் இடுக்கணுற்றபோதும் பித்தடைந்தகாலத்தும் இழக்காது இதனையான் போற்றி வந்தேன். எவ்வளவு சிறப்பாக என்னுலிது பரிந்து பாராட்டப் பெற்றதென்பதை உனக்கு விரித்துரைக்கவேண்டா. இதை யெடுத்துக்கொள். ஒருகாலத்தில் பொலிவுற்று விளங்கிய இவ்வணியைக் கண்ணீரும் புலானீரும் இன்று கரியதாக்கின. இன்னும் என் குறையைப்பற்றிப் பேசினுல் என் நல்லறிவு மாறிவிடும். தெய்வமே! தெய்வமே!! எனக்கு இன்னும் சிறிதுநேரம் இந் நல்லுணர்வு நிலைநிற்கட்டும். கருணை பொழியும் கண்ணுடையோய்! இதுகாறும் இப் பொல்லாவுடல் சுமந்தேனுக்கு உதவியாய் இறைவனுன்னைக் கொணர்ந்துவிட்டார். யான் உன் உயிர்காத்த நற்செயலுக்காக, நன்றிமறவாப் பெரும, எனக்கொரு வரமருள். இந்த மலைநாட்டாருக்குத் தலைவனெனத் தலைதெறிக்கும் தானவனே யனையானை, நல்லொழுக்க மறவே யொழிந்த நாணமிலியை, ஏழையேனை இக்கோலங்கண்ட இராதாகிருஷ்ணனை, நீ கண்ணிற்காணில், கார்க்கோடக னெனச்சீறி அவனை வதைத்துக் கொல். கடவுள் ஒன்று உண்டென்பது உண்மையானுல், யான் பழிபாவமற்ற பத்தினியென்பது உண்மையெனில், கொடியவர்களைக் கொன்று காதறு மொழுக்கத்தாரைக் காப்பேன் என்று கடவுள் சொல்வது உண்மையாயின், உனக்கு அளவிலா வலிவைத்தந்து, அடாதன செய்யு மவனைக்கொல்ல உன்பங்கில் அவர் நிற்பாராக. தெரிந்த வழிகள் யாவும் காக்கப்பட்டிருப்பதால், நீ அவைகளில் நுழையாது, சுற்றிச்செல். இன்றிங்கெனக்குத் தாயுமாய்த் தந்தையுமாய்ப் பிள்ளையாயும் நிற்கும் புனிதா! யான் போய்வருகிறேன்'' என்று கூறிக் கைகூப்பினளாய் ஓங்கிய நெட்டுயிர்ப்பினிடையே தன்னுவி நீத்தாள்.

வீரமிகு விஜபன், போரில் பலர் தன் கண்முன் இறக்கக் கண்டிருந்தானேனும், பேதை யிவள் கணவனையிழந்ததும் பித்தியாய்த்திரிந்ததும், பிறனொருவன் நெறியல்லாச் செயலாலென்பதையுன்னி, அவள் இறந்துபட்டதற்கு ஒருபுற மிரங்கினுன்; அவளை இந்நிலைக்குக் கொணர்ந்த இராதாகிருஷ்ணன்மீது மறுபுறம் சீற்றங்கொண்டான். உடனே எழுந்து நின்று 'தேடாமல் வந்தடைந்த இச்சுமையைத் தாங்கக் கடவுள் எனக்கு வலிமையைத் தருவாராக! ஏழையிம் மாது கூறியவண்ணம் செய்துமுடிக்கின்றேன். இது திண்ணம்' என்று சபதம் கூறினுன். பிறகு இறந்தவள் கழுத்திலிருந்த மெல்லிய பொன்சரட்டைக் கழற்றியெடுத்து "யாருடைய கருணை உலகில் உண்மையாய் நிலைநின்று வருகின்றதோ, யாருடையநாட்டம் உலகில் ஊர்க்குருவியின் சிறகின் வீழ்ச்சியையும் நோக்கி வருகின்றதோ, யாருடைய இடைவிடாத பார்வையினுல் புழுவும் உயிர்வாழ்ந்து வருகின்றதோ, அவருடைய கருணையாலும் உதவியாலும், பாதகக்கொடியோன் இராதாகிருஷ்ணனை வெட்டி வீழ்த்துவேன். அதுகாறும் அழுக்குற்ற இச்சங்கிலியையொழித்து வேறொரு தொடியும் எனகைக் கில்லா திருக்கட்டும்'' என்று கட்டுரைத்து அச் சங்கிலியைத் தன் கையில் சுற்றிக் கொண்டான். இதற்குள் சேணிடையோ ரரவம் கேட்டலும், தன்னைச் சேனையும் தேடத்தொடங்கிவிட்டதென அறிந்து, விழிப்புடன் வழிக்கொள்ளலானுன்.

நேர்ப்பாதைகளையும், யாவருக்கும் தெரிந்த வழிகளையும் விட்டு விலகி, கிளைவழிகளிலும், செடிகளடர்ந்த இடங்களிலும் நுழைந்துநுழைந்து செல்லலும், ஆறும் மலையும் இடையிற் படர்ந்து அவனைப் பின்னிடச் செய்தன. இறுதியில், ஊக்கம் குன்றி, பசி மேலிட்டு, வலி குறைந்து, இளைப்பெய்தலும், முள்ளும் செடியும் மூடிய புதரொன்றில் மறைந்து அந்திக் காலம் முந்துற்றதென அழுங்கினுன்.

"என் அறிவில்லாத் தீரச் செயல்களிலெல்லாம் இதுவே இறுதியானது. தலைநகரில் வீரர் கூறுகின்றுரென்னலும், அதன் காரணத்தை ஆயப்புகுந்திலேன். இம்மலைக்கூட்டம், வெருவிய தேனீக்களென முயலுமென்று முன்னுணராதது என் அறியாமையே. மோப்பங்கொண்ட வேட்டைநாய்களென அவர்கள் என்னைத் தேடி யலைகின்ருர்கள். அதோ! என்ன முழக்கம்! என்ன குழப்பம்! இனி நான் முன்நடந்தால் மூர்க்கர்

கைபுகல் திண்ணம். இரவு மூடும்வரை இங்கேயே கிடந்து பின் வழிக்கொள்வேன்'' என்று முடிவுசெய்தான்.

அந்திக்காலத்தின் அருநிழ லகலப்பரந்து கதுவ, வெண்ணிறம் மாறிச் செந்நிற மெங்கும் படர்ந்தது. அதுவும் மறைந்து மெல்லமெல்ல இரவு உலகின் மேற் கவிதலும், ஆந்தை விழித்தரற்ற நரியும் ஊளையிட்டது. பாதையைத் தெரிந்துநடக்கப் போதுமான ஒளி நிற்குங்காலத்து, சேய்மைக்கண் நின்று நோக்குவார்க்குச் சூழ்ந்தநிழலோ மனிதவுரு ஒடுங்குஞ் சமயத்து, கூர்ந்த நோக்குடனும், விழித்த புலன்களோடும் மலைமீதேறிய விஜயன் தயங்கி நடந்தான். நள்ளிரவில் பனிக்காற்று உடலினூ டுருவ, நாற்புறமும் நட்டஞ் சூழ்ந்து நிற்ப, உடலைப் பசி யுடற்ற, முன்னறியா நாட்டில் வழியறியா விஜயன் சென்றது இரங்கத் தக்கதே. நெடுநேரஞ் சென்றபின்னர், பெரியதொரு பாறையைச் சுற்றிநடத்தலும் அவன் முன்னே, குளிர்காய மூட்டிய தீயினெதிர் உட்கார்ந்திருந்தனன் மலைநாட்டா னொருவன். விஜயனைக் கண்டது மவன் விரைந்தெழுந்து வாளையோச்சி, 'நில், நீ யார்? எங்கு வந்தாய் ?' என்றான்.

வி:—நான் ஓர் அயலான்.

ம:—இங்கு என்ன வேலை ?

வி:—இரவைக் கழிக்க இடமும்,பசியை யொழிக்க உணவும், குளிரால் உணர்ச்சியிழந்த உடலைக் காய்ச்சச் சிறிது தீயும் நாடிவந்தேன்.

ம:—பிறர்பால் அருள்வேண்டு மொருவன் குரல் போ லில்லையே உன் குரல் ?

வி:—வழிதப்பிய என்றன் உயிருண்ணச் சிலவீரர் தேடுவதால் கவலையுற்றது என் மனம். ஆகவே சொற்களிற் பணிவில்லையேல், அது என் தற்கால நிலையின் பிழையேயொழிய என் இயற்கைக் குணத்தின் பிழையன்று.

ம:—நீ இராதாகிருஷ்ணனுக்கு நண்பனோ?

வி:—இல்லை!

ம:—அவனுக்குப் பகைவன் என்று வெளியிற் சொல்ல அஞ்சுகின்றாய் போலும் ?

வி:—நான் அஞ்சவில்லை. அவனுக்கும் அவனோடு சேர்ந்த கொள்ளைக்காரரனைவருக்கும் நான் அஞ்சவில்லை.

ம:—பேச்சு வெகு தீரமாய்ப் பிறக்கின்றதே.

வி:—ஐய, என் செய்கையும் அவ்வாறே இருக்கக் காண்பீர்.

ம:—இருக்கட்டும். ஆனால் ஒன்று. தப்பிப்பிழைத்தோடுதற்குத் தக்க இடங்கொடுத்தபிறகே மானினைத் துரத்திப்பற்ற வேட்டை நாய்களை அவிழ்த்து விடுகின்றோ மெனினும், பறவையைப் பறக்கவிட்டுப் பின்னரே அம்புதொடுக்கின்றோ மென்றாலும், வஞ்சனையுள்ளநரியைக் கண்டவிடத்தில் கொல்கின்றோம். அவ்வகையே பகைவர் உளவறிய வரும்வஞ்சகரை...நீ எமது உளவறிய வந்தவொரு ஒற்றன் என்று எம்மவர் சொல்வது உண்மையோ, வன்றோ?

வி:—பொய்! பொய்! இராதாகிருஷ்ணனாகட்டும் அவனொடு சேர்ந்த வீரர் இருவர் சேர்ந்தாகட்டும், நான் இளைப்பாறியபின், நாளைவந்து என்னிடம் அவ்வாறோதினால் அவர்தம் வாயைப் பிளப்பேன் யான்.

ம:—அப்படியா ? அங்ஙனமாயின் நீ யார் ?

வி:—நல்லொழுக்க முள்ளவருக்கு நண்பனும், கொடியவர்களுக்குப் பகைவனும் ஆனவன்.

ம:—ஓகோ! உலகை அளித்தழிக்கும் கடவுள் என்று சொல்லாமற் போனாயே!

வி:—கடவுள் தொழிலுக்கும் மன்னவர் தொழிலுக்கும் இத்திறத்தில் வேற்றுமை யில்லையே.

ம:—ஆனால், நீ மன்னனே போலும் ?

வி:—ஐயா! ஒவ்வொருவனும் தன் னிதயக்கோட்டைக்கு மன்னனே. அதை யடக்கி, ஐம்புலன்களாலுண்டாகும் வேட்கைப் பகைகளை வெற்றிகொண்டு, அறிவாகிய அரசை நாட்டி, அது செல்லும்வழி உணர்ச்சியென்னும் ஊழியக்காரரை நடத்தி, இரக்கமும் பொறையும் இரு கவரி வீச.—

ம:—"அப்பப்பா! போதும் போதும்! இனிறு வெட்டப் பூதம் புறப்பட்டுவிட்டது. பசிமயக்கமோ பித்தமோ உனக்கு? நான் மலைநாட்டான். பேச்சைக் கொண்டு உன்னை யான் வீரனென்று நினைத்தேன். இவ்வகைப் பித்தர் இந்தியாவில் பலர் உண்டு. நீ உண்டுறங்கு'' என்று கூறிக் காவலாளனை யழைத்து உணவுபடைத்து, தீயில் விறகிட்டுக் குளிர்நீக்கி விருந்தினனென்ன உபசரித்தான். உண்டபின் விஜயனை நோக்கி,

"நான் இராதாகிருஷ்ணனது தாயத்தான். அவனுக்கு நெருங்கிய உறவினனு மாவேன். நீ அவனைப் பழித்துக் கூறிய ஒவ்வொரு மொழிக்கும் இந்த என் வாளை ஒவ்வோர் முறை வீசக் கடமைப்பட்டவன். அதோடு உன்னுடைய விதியைப்பொறுத்து ஓராருடமும் உண்டு. நான் என் துளைக்கருவியை முழக்கினால், ஆயிரம் வீரர், அளவில்லா ஆற்றலர், இப்போது என் முன் நிற்பார். உன்னை ஒரு நொடியில் நான் அழித்து விடக்கூடும். அல்லது இக்கணமே,மெலிந்த உன்னோடு போரிட்டு உன்னைக் கொல்லவும் கூடும். ஆயினும், தலைவனது நன்மைக்காகவாவது, அல்லது மலைநாட்டார் விழுமங் கருதியாவது, நடுவுநிலைமைதவறி உனக்கொரு தீங்கையு மிழையேன். தளர்ந்தவனைத் தாக்குதல் இழிதொழில்; விருந்தின னென்போன் மருந்தெனப் போற்றத்தக்கவன். ஆகவே அச்சமின்றி இங்கே இரவைக் கழி. விடிந்தபின் உன்னை நானே வழிநடத்திச் சென்று, குன்றுங் காவலும் குறைவின்றிக்கடந்துசெலுத்திக் கோவிலாங்கூர்வரைக் கொண்டுவிடுவேன். அதன்பின் உன் வாள்கொடு உன்னை நீ காத்துக் கொள்வாயாக'' என்றனன்.

வி:—இவ்வளவு பெருந்தன்மையோடு அளிக்கப்படும் காப்பினை நானும் நன்றியுடன் ஏற்றுக்கொள்கிறேன். அதன்பின் ஈசன் செயல்.

ம:—அவ்வாறாயின் உறங்குக. நம்மைச் சூழ்ந்த ஏரியில் உள்ள பச்சைத்தேரை தாலாட்டப் பழியில்லா மனிதர் கொள்ளும் உறக்கத்தை யடை.''

பின் இருவரும் அடுத்தடுத்து நெடுநாளைய நண்பர் போலும், இணைபிரியா உடன்பிறப்பாளர்போலும் ஐயமும் அச்சமுமின்றி, அருணன் கதிர்கள் அண்டத்தை அணுவும்வரை உறங்கிக் கிடந்தனர்.

OF THE 7 MAY

தமிழ்ப் பாடம் 121.

வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[346-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

ஏவி லங்குசிலை யைவர்வந் தணுகில்
யானயர்ந் தெளிதி ருப்பனோ
கோவி லங்கு பொரவஞ்சு மோகரட
குஞ்சரங் கள்பகை கொண்டகால்
மேவி லங்குமுன் மலைத்தல் கையறைய
வேண்டுமென் றதுநின் மேன்மையோ
நாவி லங்குமென வெண்ணியோ மிகவு
நன்றநன் றரசர் ஞாயமே. 55.

பதவுரை.

ஏ - அம்புகள், இலங்கு-விளங்குகின்ற, சிலை - வில்லைக் கையில் ஏந்தியிருக்கின்ற, ஐவர் - பஞ்சபாண்டவர்கள், வந்து அணுகில் - போர் செய்வதற்கு வந்து அடைவார்களேயானால், யான் - நான், அயர்ந்து - சோர்வு உற்று, எளிது இருப்பனோ - எளியவர்போல் சும்மா இருப்பேனோ?

கட - மதம்பொழிகின்ற, குஞ்சரங்கள் - யானைகள், பகை கொண்டகால் - பகைகொண்டு வருங்கால், கோ விலங்கு - விலங்குகளின் அரசனான சிங்கம், அஞ்சுமோ - பயப்படுமோ!

அங்கு - குருக்ஷேத்திர பூமிக்கு, மேவில் - வருவார்களானால், மலைத்தல் - போர் செய்வதாக, முன் - போர்நிகழ முன்னமேயே, கை அறைய வேண்டும் - நாகை அறைந்து கொடுக்கவேண்டும், என்றது-என்று நான் கூறியது,நின்-உன்னுடைய,மேன்மையோ-பெருமையைக் காட்டக்கூடியதோ!

நா விலங்கும் - எனது வார்த்தை பிறழும், என - என்று, எண்ணியோ - மதித்தோ (நீ இப்படிக் கேட்டாய்)

அரசர் - அரசர்களிடத்தில் பேசும், நியாயம் - இந் நியாயமானது, நன்று நன்று-வெகு நன்றாயிருக்கின்றது.

விரிவுரை:—'உரைத்த உண்மை மொழி பொய்த்ததென்று அமரர் புகலில் என்,' என்று பேசிய வாய் உலராமுன்னம், 'நா விலங்குமென எண்ணியோ, என்னைக் கைஅறைந்து தரவேண்டுமென்று கேட்கின்றாய்' என்று துரியோதனன் இங்குச் சீறுவதுகாண நமக்கு நகையே மிகுகின்றது. மெய்யுடை யொருவனது வாய்மையை அயிர்த்தக்கால் அவனுக்கு இத்துணைக் கோபம் வந்திடாது; மற்றுப் பொய்யன்றி வேறொன்றும் புகல்வதற்கறியாத் துரியோதனன் அனையார் தம்முடைய பேச்சு அயிர்த்தற்கும் அடுக்காதென்று ஆரவாரம்செய்தல் மானுட இயற்கையேயாகும்.

குறிப்பு:— விலங்குபோர என்பது எழுவாய்த் தொடர்; ஆதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. கரட குஞ்சரம் என்பது,இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை; எனினும், நிலைமொழி வருமொழி ஆகிய இரண்டும் வடமொழிகள் ஆதலால் வல்லினம் மிகவில்லை.

அளிவ ருங்குழல் பிடித்துமன் னவையி
லைவருக் குமுரி யாளைநா
னெளிவ ருந்துகி லுரிந்த போதரு
கிருந்து கண்டவர்க ளல்லரோ
துளிவ ரும்புனல் பரிந்தருந் தியிடு
சோறுதின் றுயிர்சு மந்துதோ
ளிளிவ ரும்படி யிருந்தபா வியரு
மின்று மானநிலை யுணர்வரோ. 56.

பாண்டவர்களுக்கு மானம் அவமான மொன்றுமில்லை என்று துரியோதனன் ஏசுகின்றான்.

பதவுரை.

மன் அவையில் - ராஜசபையில், ஐவருக்கும் - பாண்டவர்கள் ஐந்து பேருக்கும், உரியாளை - மனைவியாகிய திரௌபதியைக் கொண்டுவந்து, நான்-நான், அளி - வண்டுகள், வரும் - வந்து சேர்கின்ற, குழல் - அவளது கூந்தலை, பிடித்து - பிடித்து, எளி வரும் - பாண்டவர்களுக்கு அவமானம் வரும்படி, துகில் உரிந்தபோது - துகிலை உரிந்த சமயத்தில், அருகிருந்து - பக்கத்தில்நின்று, கண்டவர்கள்- பார்த்துக்கொண்டிருந்தவர்கள், அல்லரோ - அல்லரோ அவர்கள்.

துளிவரும் - துளித்துளியாகச் சிதறுகின்ற,புனல்- நீரை, பரிந்து - விரும்பி, அருந்தி - அருந்தியும், இடு - பிச்சையாக இடப்படும், சோறு - சோற்றை, தின்று - தின்றும், உயிர் சுமந்து - உயிரைத்தாங்கி, தோள் - புஜங்கள், இளிவரும்படி - இழிவை அடையும்படி, இருந்த - இருந்த, பாவியரும் - பாவிகளாகிய பாண்டவர்களும், இன்று - இப்பொழுது, மான நிலை - மானம் என்னும் நிலையை, உணர்வரோ - அறிவார்களோ!

விரிவுரை:—'நாணமற்ற பாண்டவர்களுக்குத்தூது வந்த நீ, மன்னர் மரபும் அவைமுறையும் எப்படி அறியப் போகிறாய்' என்று துரியோதனன் கண்ணனை ஏசுகின்றான். தம்முடைய மானத்தைக் காக்காத கீழ்மக்களை, பிறருக்குப் பரிவம்உற்றதென்று பழிக்க முற்படுவர் கொழுந்தியென்றும் பாராது திரௌபதியைத் துகில்உரிந்த செய்கை மிக்க மானமுடைய செய்கையாம். அதைக்கண்டு சும்மாவிருந்தவர்க்கே அவமானம் விளைந்ததாம். தானே கெடுத்துவிட்டு, கேடுற்றவர்களைக் குறைகூறிப் பழிப்பது கயவர்குணங்களில் ஒன்றாகும். 'இடுசோறு தின்ற பாவியர்' என்று பாண்டவரைத் துரியோதனன் இகழ்ந்தது அவ்விழிகுணத்தின் பாற்படும். 'துளிவரும் புனல் அருந்திடும்' என்றது பீமசேனனைப் பழித்ததாகும். மன்னவையில் பாஞ்சாலியை மானபங்கம் செய்தபோது,அண்ணனுக் கஞ்சிச் சும்மாவிருந்த வீமசேனன்,'இக்கொடுமை புரிந்த துரியோதனனைக் கொன்று அவனது உதிரத்தை என் கையில் ஏந்திப் பருகும்வரையில், என் கையால் நீர் அருந்துவதில்லை' என்று சபதம்செய்துகொண்டான். அன்றுமுதல் வீமசேனன், நீர்நிலை சென்று, கதையா லடிக்க மேலெழும் துளிகளை வாயால் ஏந்தியே நீர் குடிப்பது வழக்கம்.

அன்னை யானவரு மிருவரா முதல
ளித்த தந்தையர்க ளைவராம்
பின்னை யாசைகொடு குருகுலத் துரிமை
பெறுவ ராமொரு பிறப்பிலா
மின்னை யாமி வர்க ளைவரும்
பரிவினொடு தனித்தனி விரும்புவா
ரென்னை யாமவரோ டொருகுலத் தரச
னென்ப தம்மவிவை யென்கொலாம். 57.

பிறப்பா லிழிந்த பாண்டவர், தன் குலத்தவர் ஆகா ரெனத் துரியோதனன் மறுக்கின்றான்.

பதவுரை.

(பாகம் கேட்கும் பாண்டவர்களுக்கு) **அன்னை ஆனவர்** - தாய் ஆனவர்கள், **இருவர் ஆம்** - குந்தி மைத்ரி என்னும் இருவர்; **முதல்**-இவர் பிறப்பதற்குக் காரணமாயிருந்து, **அளித்த**-பெற்ற, **தந்தையர்கள்** - தந்தைமார், **ஐவர் ஆம்** - ஐந்து பேர்கள்; **பின்னை** - (இப்படிப்பட்டவர்கள்) பின்னை, **ஆசைகொடு** - பேராசையினால், **குருகுலத்து உரிமை** - குருகுலத்தவர்களுடைய உரிமையை, **பெறுவர் ஆம்** - பெற விரும்புவார்கள், **ஒரு பிறப்பு இலா** - ஒருவிதமான பிறப்புமில்லாமல் நெருப்பில் தோன்றிய, **மின்னை ஆம்**-மின்னலை ஒத்த பாஞ்சாலியை, **பரிவினொடு** - ஆர்வத்தோடு, **தனித்தனி** - தனித்தனியாக, **இவர்கள் ஐவரும்** - இந்த ஐந்துபேரும், **விரும்புவர் ஆம்** - விரும்புவார்களாம்.

(இப்படிப்பட்ட பிறப்பும் மனையறமும் உடையவர்கள்) **என்னை ஆம்** - என்னை, **அவரோடு** - தங்களோடு, **ஒருகுலத்து** - ஒருகுலத்தைச் சேர்ந்த, **அரசன்** - அரசன், **என்பது** - என்பதானது, **அம்ம**-என்னவிந்தை; **இவை என் கொல் ஆம்** - இவ்வாறு கூறுவதை என்னென்று சொல்வது.

விரிவுரை:—பாண்டவர்க்கு அன்னையர் இருவரும் தந்தையர் ஐவரும் அமைந்த வரலாறு முன்னரே கூறப்பட்டிருக்கின்றது—(3வது வால்யூம். 29வது பக்கம்). அண்ணன்தம்பிய ரென்று ஐவரிருந்தால் இவர்களனைவருக்கும் தந்தை ஒருவனும், மனைவியர் தனித்தனி ஐவரும் இருப்பது முறை. இப்பாண்டவர்க்கோ மனைவி ஒருத்தியும் தநதையர் ஐவரும் ஆவதைக் காட்டித் துரியோதனன் இங்குப் பரிகசிக்கின்றான். “யமனுக்கும் வாயுவிற்கும் இந்திரனுக்கும் அசுவனிதேவர்களுக்கும் பிறந்த பாண்டவர்க்கும் எனக்கும் என்ன இரத்தசம்பந்த மிருக்கின்றது? நானும் அவர்களும் ஒருகுலத்தவ ரென்றுரைப்பது எங்ஙனம் அமையும். பின் அவர் குருகுலத்து உரிமையென்று எந்த வாய்கொண்டு கேட்கலாம். அன்னவர்க்குத் தூதுவந்த கண்ணன் தானும் புன்பிறப்புடையவன், என்னைக் கையறைந்து தாவென்று கூசாது கேட்கத் துணிந்தனனே” என வெறுப்பது துரியோதனனுடைய கருத்து

இலக்கணம்.

F. ஆறும் வேற்றுமை.

ஆறும்வேற்றுமையின் உருபு பொருள் முதலியன, முன் (1வது வால்யூம், 971வது பக்கத்தில்) கூறப்பட்டிருக்கின்றன. ஆறும்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகைகள் தமிழில் அமைவதில்லை.

I ஆறும்வேற்றுமை உருபுகளாகிய, அது, ஆது, அ, உடைய என்பவைகளை ஏற்றிருக்கின்ற நிலைமொழிகளுக்குப்பின் வருகின்ற மொழிமுதல் வல்லினமெய் மிகாது.

எனது+சிரம்=எனது சிரம்.
மானினது+பார்வை=மானினது பார்வை.
மயிலினது+தோகை=மயிலினது தோகை.
எனது+கை=எனது கை.
என+கைகள்=எனகைகள்.
அரசனுடைய+பொருள்=அரசனுடையபொருள்

II ஆறும்வேற்றுமைத் தொகையில் பெரும்பான்மை வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

கை+திறம்=கைத்திறம்.
புலி+தோல்=புலித்தோல் (புலியின்தோல்).
பறவை+சிறகு=பறவைச் சிறகு.
பந்து+திரட்சி=பந்துத் திரட்சி.
கொக்கு+கூட்டம்= கொக்குக் கூட்டம்.
கலை+பெருமை=கலைப் பெருமை.
கூழ்+சுவை=கூழ்ச் சுவை.
தேர்+கால்=தேர்க்கால்.
நாய்+குரல்=நாய்க்குரல்.
புழு+தலை=புழுத்தலை.

குறிப்பு:—உருபு தொக்கிருக்க,நிலைமொழி சாரியை மாத்திரம் பெற்றிருப்பினும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்:—

மரத்து+கிளை=மரத்துக் கிளை
குலத்து+பெருமை=குலத்துப் பெருமை

ஆறும் வேற்றுமைத் தொகையில் பெரும்பான்மை வருமொழிமுதல் வல்லினமெய் மிகும் என்றோம். மிகாத இடங்களும் உள. அவை பின்வருமாறு.

(1) நிலைமொழி உயர்திணையாயின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

புலவர்+கூட்டம்=புலவர் கூட்டம்
சீதை+தலை=சீதை தலை

(2) நிலைமொழி வருமொழி இரண்டும் சமிஸ்கிருத பதங்களா யிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லின மெய் மிகாது

சாகர+சீதளம்=சாகர சீதளம்
முகுர+பிம்பம்=முகுர பிம்பம்
வதன+சோதி=வதன சோதி

(3) நிலைமொழி, இடைத்தொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றிலுடையதாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

மார்பு+பெருமை=மார்பு பெருமை
போழ்து+செலவு=போழ்து செலவு
தெள்கு+கால்=தெள்கு கால் (தெள்கு= ஒரு பூச்சி)

குறிப்பு:—ச் ட் ற், என்ற மெய்களில்ஏறிய இடைத்தொடர்க் குற்றியலுகரங்கள் தமிழில் வழங்கக் காணேம்.

(4) நிலைமொழி ஆய்தத்தொடர்க் குற்றியலுகரத்தை ஈற்றிலுடையதாயின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

எஃகு+கூர்மை=எஃகு கூர்மை.

(5) நிலைமொழி, க் ச் த் என்னும் மெய்களின் மேல்ஏறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களைஈற்றில் உடையதாயின், வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

பாகு+சுவை=பாகு சுவை
காசு+கதிர்=காசுகதிர் (காசினது கதிர் - மணியின் [ஒளி)
காது+பருமன்=காது பருமன் (காதினது பருமன்)

குறிப்பு:—பகர மெய்மே லேறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரம் வரக் கண்டிலோம்.

(b) க் ச் த் ப் என்னும் மெய்களின்மே லேறிய உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தில் முடிகின்ற நிலைமொழியோடு புணரும் வருமொழிமுதல் வல்லின மெய் மிகாது.

படகு+செலவு=படகு செலவு.
அரசு+பெருமை=அரசு பெருமை
விழுது+செம்மை=விழுது செம்மை.
மரபு+பெருமை=மரபு பெருமை.

குறிப்பு:—எனவே, ட் ற் என்ற மெய்களின்மேலேறிய நெடிற்றொடர்க் குற்றியலுகரங்களேனும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களேனும், நிலைமொழியா யிருக்குமாயின் வருமொழிமுதல் வல்லினமெய் ஆறும்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் மிகும். அம்மெய் மிகுவதோடு, இக்குற்றியலுகரம் ஏறியிருக்கும் ட் ற் என்ற மெய்கள் நிலைமொழியில் இரட்டும். (முன், 2வது வால்யூம், 988-வது பக்கத்தில், இக் குற்றியலுகரங்களுக்குப் பின் உயிர்வரின், அக் குற்றியலுகரம் ஏறியிருந்த மெய்கள் இரட்டிப் புணருந் தன்மையை விளக்கி யிருக்கின்றோம்)

வீடு+கதவு=வீட்டுக்கதவு } நெடிற்றொடர்
ஆறு+பாய்ச்சல்=ஆற்றுப் பாய்ச் [சல்

உதடு+பருமன்=உதட்டுப் பருமன் } உயிர்த்
வயிறு+கொடுமை=வயிற்றுக் கொடுமை } தொடர்

ஆச்சரிய சூடாமணி

[352-வது பக்கத் தொடர்ச்சி.]

189108

6. கணையாழி அங்கம்

அநு:—எனதிறைவி, என்னென் றுரைப்பேன். தோகை மென்மயில் அகவக்கேட்பினும், தழையொடு மலர்கள் கூடிக் காற்றிற் கசைந் தூசலாடக் காண்பினும், மேகத்தால் கருத்திருண்ட இரவினும், அவர் தன் னுருயி ராற்றாமல் அயர்ந்து சோர்வார். மின்னி னொளியால் இருள் சிறிது பிளந்தக்கால், ‘செவ்வரி சிதறிய கண்ணினள் என் காதலி, நீரிடை முழுகலுற்றாள். ஐயகோ, அவள் தளிர்க்கரங்க ளன்றோ இவை வெளியே தெரிகின்றன’ என வெருவிய விரைவினோடு வாவியி னருகுசென்று விரிந்த தாமரைத் தாள்களைப் பரிவுடன் பற்றி ஈர்ப்பார்.

சீதை:—அன்னதன் பின் ?

அநு:—வேறிடம் செல்வர். சென்று பல்லவசயன மொன்று அழகுற அமைப்பார். உன் குழலிற்கணிந்து கோலஞ்செய்யு மாசையால் நறுமலர் கொய்வார், ஒரு வல்லியை நண்ணி, “ஏ, வைதேகி, கல்லினும் வலிய நெஞ்சுடைக் காரிகை, என் னுயிரே, முனிவருமுகத்தினேய்! என்வயின் வாராய்” என்று நயமுற அதன் துனியினைத் துடைப்பச் சூழ்கின்றார்.

சீதை:—மாருத மதலாய், இவைகளைக் கேட்கப் பெண்டிர்தம் உள்ளம் விழைந்து மகிழும். யானோ, நாணமுந் துயருமே கூர்கின்றேன்......புன்வினையேன் பொருட்டு என் கொழுநர் இன்றளவு மந் நிலையிற்றானேயோ இருக்கின்றார், சொல் ?

அநு:—இல்லை, இல்லை. துணை கிடைத்ததால் இப்பொழுது அவர் துயர் ஒருவாறு தெளிந்திருக்கின்றது.

சீதை:—என் கணவருடைய துன்பகாலத்தில் சேர்ந்தவத் துணைவர் யார்?

அநு:—தாயே, கேட்டருள்க! பிறகு, காட்டிலிருந்து எம்மிடத்திற் கழைத்துச் சென்று நல்வினை தீவினைகளால் ஒன்றுசேரும் உடலு முயிரும்போல ராமசுக்கிரீவர்க்குத் தொடர்பு ஏற்படுத்தினேன்.

சீதை:—அதன்பிறகு?

அநு:—அப்பால் அவர் பெருமையால், வாலிபயமே யற்ற என்தலைவன் காடி குரங்கொடு மற்றுள விலங்குகள் செல்வமும், திசையெலாம் பரந்தகன்ற அரசும் எளிதில் எய்தினன்.

சீதை.—பிறகு, பிறகு?

அநு:—இவ்வாறு தன் காரியங் கைகூடப்பெற்ற சுக்கிரீவன், தங்களைத் தேடலென்னும் ராமகாரியத்தில் ஊக்கங்கொண்டனன்.

சீதை:—பிறகு...பிறகு ?

அநு:—உருவினால் குரங்கேயேனும், வினையினால் விண்ணுள அமரரையுங் கடந்ததோர் பெருமை வாய்ந்த வானர வீரர்களையும், எண்கின் தலைவரையும், வரையறைநாட் குறிவைத்துத் திசைதொறும் போக்கினன்.

சீதை:—பிறகு, பிறகு?

அநு:—இத்திசைக்கும், எம் மிளவேந்தன் அங்கதனைத் தலைவனாக்கிக் காடிக்கிறைவனை ஜாம்பவனை முன்னிட்டு என்போன்ற வலியிலார் அடங்கிய இப்படையை விடைகொடுத் தனுப்பினன்.

சீதை:—இத்திசை ஐயுறற்குரியதே! பிறகு, பிறகு?

அநு:—பிறகு, வானரவீர ரனைவரும் இருக்கும் பொழுது, முன் பார்த்த உறுதியின் உண்மையால் என்னைப் பக்கத்திலழைத்து இதைக் கொடுத்த எம் பிரா னிராமன், மொழிகளுஞ் சில இயம்பினன்.

சீதை:—(களிப்புடன்) என்ன, என்ன?

(அநுமன் வணங்கி மோதிரத்தைக் கொடுத்தல்)

சீதை:—(களிப்பபுடன் வாங்கிச் சற்று நோக்கி) இஃதன்றோ ஆச்சரிய மோதிரம்! இதையன்றோ முனிவர் கொடுத்தனர்! இளையவீரன் இலக்குவனன்றோ இதனைக் கொணர்ந்தனன்.

அநு:—(தனக்குள்) சிரமேற் சூடுகின்றாள்...சிறுமுத்த மிடுகின்றாள்...கரங்களிற் புல்குகின்றாள்.... விரல்தொறு மணிகின்றாள். ...கண்ணீர் கலுழ்ந்து அசைவிலளாய் ஆழ்ந்த நினைவுடன் நோக்குகின்றாள்.

சீதை:—உலகிற்கெல்லாம் மூலமானுன் அணிந்த தோர் ஆபரணமே யிது! வில்காணின் தழும்பேறப் பெற்றுளது. அரக்கர்தம் மாயையை வெளிப்படுத்தும் சால்பது. இரவுதுரக்கும் மணிவிளக்கு ... முகக் கோலம் முழுவதுங் காட்டுமோர் கண்ணுடி யன்றே விது!

அநு:—(தனக்குள்) இவள்பொருட்டு ஐயனும் இத னின் ஆயிரமடங்கு மால்கொண்டு மயங்க வேண்டிய வனே யாகின்றுன்.

சீதை:—ஆழியே, என்னைப்போல் உன்னையும் நம் கோமகன், ஒருநாள் கைக்கொண்டனன்...நீயும் இன்று பிரிந்து போந்தனை....இன்னலிது நினக்கும் நேர்ந்ததேன்? என்னைப்போ லுன்னையு மரக்கன் புக் ககற்றினுனோ!

அநு:—(வெளிப்படை) சிற்றிடை நங்காய், ரகு குல காளை இராமனது விரலின் பிரிந்த வெந்துயரை இந்நாள் உன் மெய்சேர்ந்து ஆற்றிக்கொள்கின்றது இவ் வாழி.

சீதை:—என் செய்வேன்!

அநு:— (தனக்குள்) நாணல்மலர்போல் விளர்த்த இவள் மேனியில் இம் மோதிரம் உவகையவாய்தொறும் ஒளியுற விளங்கும் வழி யீதென்னச் சிலிர்த்துப் பொலிந்த உரோமராசிகள் காட்டுகின்றன.

சீதை:—இதன்கண் பொறித்துள பெயரை நோக்கு வேன்— (கைநிமிர்த்துப் பார்க்கின்றுள்)

அநு:—(தனக்குள்) அம்புயத் தகவயின் பனித்திவலை பொழிந்தால் போல், தரளத் துகளன்ன கண்ணுலி யவள் மலர்ந்தசெங் கைகளிற் சிதறுகின்றன.

சீதை:—நன்மையோய், நின்னைக்கண்டதாற் கடவுட் கருணை இனி உண்டென் றுணர்ந்தேன். நீ தந்த மோதிரத்தாலென்கொழுநனைத் தழுவினவள்போன்று மாயினேன். இனி அவர் மொழிகளைக் கேட்க விழை கின்றதென்மனம்...இவ்வாழியன்றி வேறோர் அடை யாளம் வேண்டா...... எனினும்.....கோமகன் குறித்துரைத்த சொற்களை எனக் கியம்புவாய்.

அநு:—வஞ்சனை யரக்கரிடை வைகியுளீ ராதலின், நீர் உறுதிகொள்ளுமாறு சில உணர்த்த வருளினர்

சீதை:—ஐய, அஃதென்ன!

அநு:—"பொழுதலாப் பொழுதில் விளக்கொளி குறைத்து உன்னருகு நெருங்கிய வென்னைக், 'கள்ள, உன்னைக் கடிதல்வேண்டு' மெனப் பேசி உன் வாயே போல் தேன்துளிக்கும் மல்லிகைமாலையால் என் கைகட்டி விளையாடுவாள்போல் என் மனத்தைக் கட் டினுய்..."

சீதை:—(தனக்குள், களிப்புடன்) ஆசைக்கொடியே, இப்பொழுது நீ அரும்பலாம். அநுமனன்றே இன் றன்னை அமுதத்தால் நனைக்கின்றுன். மனமே, நீ நண்ணுமா றுனக்கு இராமன் வழியமைத்துத் தருகின் றுன். நமதுலகு வழிக்கொண்ட வாழ்வே, இடையிலே நீ இப்பொழுது திரும்பிவிட்டாய்...(வெளிப்படை) ...வாயுகுமார, உன்னெடு சிறிது உரையாட விரும்பு கின்றேனுயினும், பேசுவது யாதெனத் தெரிகிலேன். உலகிற்கெல்லாம் உயிராவார் உன் தந்தை. எனக் கோவென்றுல் நீயே உயிராய்.........................

அநு:—ஊழியர்க்கு ஊக்கமூட்டும் ஆற்றல் நனி உடையீர்...... (தலைகுனிந்து நிற்கின்றுன்).

சீதை:—பவன குமார, சொல், இது அதிசயமே. எவ் வுபாயத்தால் இங்கு வந்தனை.. எவ்வாறு இப் பெரிய பரவையைத் தாண்டினுய்?

அநு:—பிறகு அம்மலையிலிருந்து, ராமனது கட் டளையை மங்களாக்ஷதைபோலத் தலையாற்பெற்று இத்திசைக்குக் குரக்குப்படை புறப்பட்டது.

சீதை:—பிறகு, பிறகு?

அநு:—அப்பால், மஞ்சு சூழ் மலைக்குகைகளிலும் பசுமரமடர்த்த ஆற்றோரக் காடுகளிலும் கடற்கரையி லும் தூக்கமு மின்றி நுந்தமைத் தேடுவதிலேயே குரங்குகள், குறித்த அக் கால அவதியைக் கழித்தன.

சீதை:—பிறகு, பிறகு?

அநு:—அவ்வாறு அவதி கடந்ததால் குரங்குகளனை த்தும் உண்ணுமல் உயிர்விட உறுதிகொண்டன.

சீதை:—ஐயோ! ஐயோ!! பிறகு, பிறகு?

அநு:—அப்பொழுது, இறந்துபோய சடாயுவின் தமையனுன சம்பாதி என்ற கழுகரசன், குழுமிய குரங்குகளின் ஒலிகேட்டு அவ்வாறு உயிர்விடு மிடம் வந்தான்

சீதை:—பிறகு, பிறகு?

அநு:—அம்மா! அதன் பிறகு, அவன் தங்கள் நிலை மையைக் கூடவிருந்தவன்போல எங்களுக்கு விளக் கிக் கூறினுன்.

சீதை:—ஐயோ! அக் குலத்தவரனைவரும் பிறர்க் குதவி நாடுபவரேயாம். முன்னரே அவன் இளையோன் என்பொருட்டுத் தன் னின்னுயிர் துறந்தனன்.

சீதை:—பிறகு, பிறகு?

அநு:—அப்பால், அவன் காட்டிய வழிப்படி பெரி யவிக் கடலைக்கடந்து இந் நந்தவனம் வந்தேன்.

சீதை:—நீ என் துயர்க்கடலை யன்றே கடந்தாய்! நின்னிற் சிறந்த நீகான் வேறிலன். வாயுகுமாரா! இத் துயர் நீருங்காலம் எப்பொழுதென்று சொல்?

அநு:—இங்குத் தம் கணவரனுப்பிய செய்தியுமொன் றிருக்கின்றது.

சீதை:—செய்தியுமுளதோ, ஆயின் அருள் பெற் றேன்.

அநு:—"முன்னுள் மன்னவையில் வில்லினை வளைத்து யானுன்னை அடைந்ததேபோல், போர்முனையில் கார் முகங் குழைய வாங்கி இராவணன் வைத்த சிறையி லிருந்து மீட்டி வருவேன்" என்பதே அவர் உறுதி வாக்கியம்.

சீதை:—அரக்கன தாவியை வாங்கிய பின்னரோ என்னை மீட்டிச் செல்லப்போகிறுர் என் தலைவர். ஆயின் ஏன் இப்பொழுது தாமதிக்கிறுய். விரைவிற் செல். முனிவர் கொடுத்தருளிய இச் சூடாமணியைப் பெற்றுக்கொள். இதை நோக்கி என் கணவரும் நான் விருப்ப முடையவள், என்றறியட்டும்.

அநு:—(தனக்குள்) என்னே! காலத்திற்கேற்ற அறி வும், பிறர்மனம் நினைப்பதை ஊகித்துணரு மாற்ற லும் நனியுடையாள் இப்பிராட்டி. (வெளிப்படை) தலைவி! அருள் புரிக! (பெறுதல்)

சீதை:—கோமகன் வருந்தாதிருக்குமாறு என் நிலைமை அவர்க் குரைப்பாய்.

அநு:—அருள்பெற்றேன்.

சீதை:—இப்பொழுது நீ செல். யானும் முன்போ லச் சிஞ்சுபமரத்தடியிற் சென்று உங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

அநு:—பிராட்டியின் கட்டளைப்படியே! அம்மணி, ஐயனுன இராமன் அரக்கரை வதைத்து, ஓய்ந்த வேளை யில் கைவில்லைக் கீழ்வைத்து, கருவிபடு மிடங்களிற் புண்பட்ட, குடைரேகை கும்பரேகை முதலிய அடையாளம்பொருந்திய தன் கைகளின், காப்பிற் காக உடும்புத்தோல்மூடிய விரல்களால் உமது சடை யை விடுக்கப் போகின்றுர்.

சீதை:—நீ இடையூறின்றி இனிதிருப்பாயாக.

(இருவரும் போதல்)

களையாழி யங்கம் முற்றிற்று.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—1. மந்திரப்படலம்.

[357வது பக்கத் தொடர்ச்சி]

ஏற்போ ரென்னக் கொடுப்போர் மேன்மை.

தூக்கசொன் முறையறிந்து தன் னுள்ளத் துவகையை விளம்பிய சுமந்திரன், மன்னன்றன் ஏவலால் கோமகன் கோயிலை நண்ணிச் சீதையோடிருந்த அவனைத் தன் கண்ணு மனமும் வண்டெனக் களிப்புறக் கண்டு தொழுது, "உண்டோர் காரியம் வருகெனத் தயரதன் உரைத்தனன்" என்ன, கொண்டல்போல்பவன் கொடிநெடுந் தேர்மிசைக் கொண்டான். கொண்டு,

முறையின் மொய்முகி லெனமுர சார்த்திட மடவார்
இறைக ழன்றசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமு டிந்ததென் றார்த்திடக் குஞ்சிபைச் சூழ்ந்த
நறையலங்கல்வண் டார்த்திடத் தேர்மிசை நடந்தான்.

[அடர்ந்த மேகங்கள்போல் முரசங்கள் வரிசையாக முழங்கவும், இவனது அழகினைக்கண்டு குழைந்து மெலிந்த மாதர்களது முன்கையினின்று கழல்கின்ற சங்கவளையல் கள் ஒலிக்கவும், தேவர் தங்கள் குறை தீர்ந்ததென்று ஆரவாரஞ் செய்யவும், தனது திருமுடியைச் சுற்றியிருக்கின்ற தேன் மிகுந்த பூமாலையில் வண்டுகள் ஒலிக்கவும், இராமன் தேர் ஏறிச் சென்றுன்]

மோதும் முரசொடு ஊதும் சங்கினைச் சேர்க்காமல் மடவார் இறைகழன்ற வளைகளைச் சேர்த்து ஆர்த்திட வைக்குமாற்றுல் கம்பர், வீதிவாய்ப் போயினுன்தன், "வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோய் எரி வளர்த்திடுவதோர்" அழகினைக்கண்ட படைநெடுங் கண் மடநல்லார் உற்ற நிலையின தருமையை இனிய பாசுரங்கள் நாலைந் தகவயின் நனி செப்புவார். முன் திருமகளை மணங்கொளச் சென்றநாள், சரிந்த பூந் துகில்கள் தாங்காது மாளினம் வருவனபோன்று வீதி வாய் வீழ்ந்து இராமனை மொய்த்தடர்ந்த மிதிலா புரி மாதரார் போலவே, நிலமகள் மணம்பெற அவன் சென்ற இந்நாள், அயோத்திமா நக ரரிவைமார் களும் நாணமும் பிரிந்தாராய்ப் பிணை நிரைந்தென வெங்கும் பரந்தனர். ஆதலின்

நீளெ ழுத்தொடர் வாயிலுங் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்திடு டாமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகள் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்.

[தூண்கள் உயர்ந்த வாயில்களிலும், தளிர்களோடு தழைத்த சுரைக்கொடி படர்ந்த முன்றில்களிலும், நிலா முற்றங்களிலும், சாளரங்களிலும், தோன்றிய மாதர்தம் முகங்களாகிய தாமரைமலர்கள்,—(இராமன் தோளையோ தாளையோ கண்டவர் அவன் முழு வுருவத்தினின்றும் பிரித்து அதனையே பார்ப்பதால்) வாள்போன்ற கண்கள் சிலவும், (இராமனது மலையொத்த தோள்களை உருவுவதால்) கடம்பமாலை யணிந்த முருகனது வேல்போன்ற கண்கள் சிலவும், (அவனது கண் வாய் கைத்தலங்களாகிய பங்கயங்களில் மொய்ப்பதால்) வண்டுகள் போன்ற கண்கள் சிலவும், (அவனது கடல் போன்ற உருவமெங்கும் ஆழ்ந்து புரள்வதால்) மீன்கள் போன்ற கண்கள் சிலவுங் கொண்டு தம்முளே மயங்க—மலர்ந்தன]

இவ்வணம் நோக்கினோ ரவனைத் தழுவுமாசையாற் றளர்ந்தனர் என்னல் வேண்டுமோ! அறிவெனும் அணைகடந் திவ்வாறு இராமனை அடைதற்குப் பாய்கின்ற உள்ளத்தை உடையாராதலும் அவ்வரிவையர் கற்பினிற் கடுக்குமென்னு முண்மையை முன்னோரிடத்தில் மொழிந்திருப்பதால் மீண்டு மதனை இயம்புதல் மிகை. தழுவும் வேட்கையர் இத் தெரிவையராயினும், கோமனை யடைந்தபின் தனிப்பெருந் தந்தையே தழுவப்பெற்றுன். ஆயினும்மிச் செயற்கு வேறுபொரு ளுரைப்பாராய்க் கம்பர்,

நீர் நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதென்னளி
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கல் மார்பையுந் தனதுதோள் மார்புகொண் டளைந்தான்.

[அழகுடைய மைந்தனைத் தயரதன் அணைத்துக் கொண்டான் என்றுரைப்பானேன்! கடல் சூழ்ந்த இவ்வுலகம் முழுவதையும் தன்னைப்போல் தாங்குதற்குரிய தன்மை இராமனுக்கு உண்டோ எனச் சோதித்தறிய நினைத்தவனுய் மலைபோன்ற அவனது திண்ணிய தோள்களையும், மெய்யாகவே திருமகள் தங்கும் அவனது மாலையணிந்த மார்பையும் தயரதன் தன்னுடைய தோளையும் மார்பையும் வைத்து அளந்தான்]

என விளம்புகின்றனர். நிலங்களைத் தாங்கும் வலி இராமனுக் குளதெனும் நிச்சயமெய்திய தயரதன்,

ஆண்டு தன்மருங் கிரீஇயுவந் தன்புற நோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவ னெடும்புகழ் குறுக
நீண்ட தோளைய நிற்பயந் தெடுத்தயா னின்னை
வேண்டி யெய்திட விரைவதொன் றுளதென விளம்பும்

[இராமனை அங்குத்தன் பக்கத்தில் அமர்த்தி மனமகிழ்ந்து அன்புடன் பார்த்து, "போர்மழுவைப் பூண்டவனுன பரசுராமனது பெரும்புகழ் அடங்கும்படி நிமிர்த்திய தோள்களையுடைய இராமனே, உன்னைப் பெற்றெடுத்த நான் உன்னிடத்தில் விரைவாகக் கேட்டுப் பெறுவதற்கு ஒன்று உளது" என மேற் சொல்லுவான்]

உறைப்பதற் குரிய கருமமோ பெரியது; உரைக்கும் மன்னவன் பெரியோன்; கேட்கும் மைந்தனும்

அன்னவனே. ஆயினும் இவர்களுக் கெல்லாம்
இணையோ அல்லது மேலேயோ என்னும் பெருமை
வாய்ந்த ஒரு கவிவாராது கலையிற் பொலிந்த வாசகத்
தால் தயரதன் இராமனுக்குக் கருமத்தைக் கழறு
கின்றானதலின், இப் பாசுரங்களை ஓதுமாறேதப்
பயின்றிருப்பார் உள்ளம் அயலெலா மறந்து தூய
தோர் இன்பமுந் தானுமாய்த் தூங்கும். இத்துயிலி
னின்று அவர், முற்றிலும் மாறிய மற்றொருவராய்எழு
வாரென்பது திண்ணம். இரத்தலும் ஈதலேபோ லாக
வல்ல அருமையை வள்ளுவர் காட்டினர். மற்று ஈத
லும் இரத்தலேபோ லமையக் காணவேண்டுமெனின்
கம்பரேயன்றி காடுதற்கு வேறு யாருளர்? அருகிருந்த
மைந்தனை உவந்து நோக்கிய தயரதன், அவனுக்குத்
தன் தனிப்பெரு மரசினை அளிப்பது கருமமாயினும்,

ஐய சாலவு மலசின னரும்பெரு மூப்பும்
வெய்ய தாயது வியலிடப் பெரும்பரம் விசித்த
தொய்யன் மாநிலச் சுமையுறு சிறைதுறந் தினியான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும்

[ஐயனே, மிகுந்த அல்லலுற்றுப் போயினேன் யான்.
விலக்கற்கரிய இப்பெரிய மூப்பும் எனக்குக் கொடியதா
யது. இவ்வகன்ற பூமியாகிய பெரிய பாரத்தைக் கட்டிச்
சுமக்கவேண்டிய இப்பிறவியென்னும் சிறைநீங்கி நான்
பிழைக்கவல்ல வழியைச்சேர்வதற்கு நீ உதவி செய்ய
வேண்டும்]

என இரத்தலே செய்கின்றனன். தானிவ்வாறு இரப்
பதுந் தகுமெனத் தோற்றுவிக்க எண்ணினன்போல்,

உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
இருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை
தரும மன்னநிற் றந்தயான் தளர்வது தகவோ
கரும மென்வயிற் செய்யிலென் கட்டுரை கோடி

[இவ்விதம் உரிமையோடு இரப்பதற்குரிய மைந்தரைப்
பெருவது, மிகுந்த துயர்நீங்கி இம்மையும் மறுமையும் பெறு
வதற்கே என்பது பெரியவர் கொள்கை. தருமம்போன்ற
உன்னைப் பெற்ற யான் தளர்வது தகுமோ. ஆதலின்
எனக்கு நீ செய்ய வேண்டியதைச் செய்ய மனங்கொள்வா
யாயின், நான் உரைப்பதைக் கேள்]

என்று கூறிப் பின்னும்,

முன்னை யூழ்வினைப் பயத்தினு முற்றிய வேள்வி
பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற் பெற்றேன்
இன்னம் யானிந்த வரசிய லிடும்பைய னென்றால்
நின்னை யீன்றுள பயத்தினி னிரம்புவ தியாதோ

[முன்பிறப்பிற் செய்தன நல்வினையினாலும், இப்பிறப்
பிற் செய்த யாகங்களின் நன்மையாலும் உன்னை யான் அரு
மையாகப் பெற்றேன். இன்னமும் நான் இந்த அரசியல்
நடத்துந்துன்பமே தாங்குபவனா யிருக்கவேண்டுமென்றால்,
உன்னைப்பெற்ற பயனாக எனக்கு நிறைவது யாதோ]

என வற்புறுத்தினன்.

ஒவ்வினனோ அல்லனோ வென்று உணர்தற்கியன்ற
முகக்குறி யாதுமின்றி இராமனிச் சொற்களைச் செவி
யேற்றிருத்தலின் தயரதன், அரசியல் தாங்கித்தாங்கித்
தானடைந்த இன்னலையும், பகீரதன் அனைய தம்
குல முன்னையோர் தந்தையர்க்காற்றிய வுதவியையும்
நினைவுறுத்தி,

மன்னர் வானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவர் தொடங்கினோன் பிழைத்தவ ரல்லர்
சொன்ம ருமகற் பெற்றவ ரருந்துயர் துறந்தார்.

[அரசர்களும், தேவர்களும், இன்னும் அத்தேவர்களுக்
கரசனாகிய பொன்னாற்செய்த நீண்ட கழலை அணிந்த இந்
திரன் போன்றவர்களும், பின்னும், பெரும் தவங்கள்
தொடங்கி விரதங்களைச் செய்தவர்களும் இவர்களெல்
லாம் கடத்தற்கு அரிய துன்பத்தினின்று நீங்கினவர்க
ளாகமாட்டார். பின் யாரெனில், தம் சொல்லை மறுக்காத
புத்திரனைப் பெற்றவர்களே உண்மையில் துயரைத்
துறந்தவராவார்]

என்னும் நீதியை ஓதினன். விதியோ தன் விளை
யாட்டை வியப்புற நடத்தும் பின் நிகழ்ச்சியை
நினைக்குமிடத்து, 'சொன்மறு மகற் பெற்றவர் அருந்
துயர் துறந்தார்'' என்னது, ''சொன்மறு மகற்பெற்ற
வர் ஆருயிர் துறந்தார்'' எனத் தயரதன் வாயில் வந்
திருக்குமாயின் அதுவே மெய்யென் றறைவது
இயற்கையெனல் வேண்டும். பிற்றைநாள், கைகேசி
யால் ஆட்டுவித்த தயரதன், இராமனுக்கு வனம்புகு
வழியினைக் காட்டப்போகின்றான். மறுத்தா லிதனை
யாகாதோ தன்மைந்தன் என்று தயரதன் மனம் எத்
துணை விழைந்திருக்கலாமெனினும், அவ்வாறு இரா
மன், மன்னவன் பணியினிற் கிணங்காது நின்றிருப்
பானாயின் அதன் விளைவு எவ்வகைத்தாமென இன்று
இயம்புதலருமை. தான் தன்மகனைப் பிரிவதனினும்
அம்மகன் தன் கடமை பிரிவதைத் தயரதன் தரிப்ப
னென்பது திண்ணமன்று. எனினும், சொன்மறு
மகற் பெற்றதால் அவன் அருந்துயர் ஆழ்ந்து மாய்ந்
தானென்பது திண்ணம். மும்மையும் உணரவல்ல
எம்பிரான் இராமன், ''ஐய, நீ யுரைக்குமிந் நீதி மறு
நாள் உன்னையேவந் தூன்றக் காண்டி'' என மனத்
துள் எண்ணினனோ யாதோ, வருவதுணர்ந்த இள
நகையனைய மெய்ப்பாடொன்று மவன்வயின் காணற்
கில்லை. எவ்வாறாயினும், தயரதன், தன்னுயிர்க் குறு
வதும் செய்ய வெண்ணியதே போன்று, சொன்மறு
மகற் பெற்றிருந்தது மவ னந்தியகாலத்தை அவல
மாக்கியது.

இன்னவாறெலாம் முகவுரை வகுத்துரைத்தபின்,
மன்னவர்மன்னவன் பரிவுடன் இராமனை இரந்து
நோக்கி,

அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொள
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க[வேண்டா
நினையல் வேண்டும்யா னின்வயிற் பெறுவதீதென்றான்.

[''புத்திரர் கடமை அத்தகையதாதலின், 'மிகுந்த துன்
பத்திற்கிடமான இப்பெரிய அரசியல் பாரத்தை வேந்தன்,
என் தீவினையினால் என்மீது சுமத்தினன்' என நீ எண்
ணிக்கொள்ளாமல், தரிக்கவேண்டிய கிரீடத்தைத் தரித்து
இந்த நல்ல தர்மத்தைக் காக்க நீ நினைக்க வேண்டும்—உன்
னிடத்தில் நான் பெறத்தகுவது இதுவே'' என்றனன்]

தயரதன் மொழிகள் இன்னபடி பரிவு மமைதியுங்
கலந்து மாறுபடற்குரியதொன் றுமின்றிக் கம்பர் நூலி
ன்கண் திகழ்கின்றன. வான்மீகமுனிவர் இவ்வரலாற்
றை வகுத்துள வண்ணமும் சிறிதயலயல் நோக்குதல்
வேண்டும். தயரதன் அங்கு இருமுறை இராமனைத்
தன்முன் வரவழைத்தனன். அவையினர் நடுவில் எய்
திய இராமனை நோக்கி, ''எனது தகுதியான மூத்த
பட்டஸ்திரீ வயிற்றில் எனது மூத்தகுமாரனாகச்
சகலவித உத்தம குணங்களோடும் தகுதியாகப் பிறந்

திருக்கும் நீ என்னுடைய கண்ணுக்குக் கண் என்பது
சொல்லவும் வேண்டுமோ'' என்ற பாயிரத்துடன்,
''நாளையதினம் உன்னை நான் இளவரசனுக்கி முடி
சூட்டப் போகின்றேன்'' என்ற தன் கருத்தை
இயம்பிப் பிறகு அரசியல் நெறிமுறை நடத்துதற்
குரிய சிலபுத்திகளைச்சொல்லி முடிக்கின்றான். பிறகு,
மறுமுறை இராமனைத் தன்மனையின்கண் தனியே
வரவழைத்துத் தயரதன் இயம்பிய சொற்கள் ஆழ்ந்து
கருதுதற் குரியன; ஆதலின் அதன் தமிழ் மொழி
பெயர்ப்பு ஈண்டு வரையப்பெற்றுளது:—

''ராம, நான் வெகுகாலம் என் இஷ்டப் பிரகாரம்
அநேகவித போகங்களை அனுபவித்து இப்பொழுது
முதுமைப் பருவம் அடைந்து விட்டேன். உன்னை
நான் புத்திரனாக அடையும் மகா பாக்கியத்திற்காக,
எவ்வளவோ அன்னதானம் சுவர்ணதானம் இவை
களோடு கூடிய யாகங்களைச் செய்தேன். வேண்டு
வோரது கருத்தை யெல்லாம் முற்றுவித்தேன்.
வேதங்களை அத்தியயனம் பண்ணினேன். வேண்டு
மென்கிற சுகம் முழுவதும் நானனுபவித்தாய் விட்
டது. தேவதைகள், ரிஷிகள், பிதிருக்கள், அந்தணர்
கள், ஆத்மா இவர்களுக்கெல்லாம் நான் நிறைவேற்ற
வேண்டியகடன்களை நிறைவேற்றி விட்டேன். இனி,
நான் செய்து முடிக்க வேண்டிய காரியங்களில்
ஒன்றே ஒன்றுதான் மிச்சமிருக்கிறது; அதாவது
உனக்குப் பட்டஞ் சூட்டிவைக்க வேண்டியது என்
பதே. அதுவிஷயமாக நான் உனக்குச் சொல்லப்
போகின்றவைகளை நீ கேட்டு அவ்விதமாகவே நடக்க
வேண்டும். இன்றைத்தினம் நமது குடிகளெல்லாரும்
உன்னை அரசனாக அடையவேண்டு மென்பதில் தங்
களுக்கிருக்கிற ஆவலைத் தெரிவித்து விட்டார்கள்.
ஆகையால் உன்னை இளவரசனாகப் பட்டாபிஷேகம்
செய்யப்போகிறேன். அன்றியும், இன்றிரவு நான்
வெகு பயங்கரமான சில கனவுகள் கண்டேன்.
மேலும், ஆகாயத்திலிருந்து இடியுடன் கொள்ளிக்
கட்டைகள் வெகு சத்தமிட்டுக்கொண்டு பூமியில்
விழுகின்றன. எனது ஜன்ம நக்ஷத்திரத்தில் சூரியன்,
அங்காரகன், இராகுஎன்ற இம்மூன்று கிரகங்களும்
பிரவேசித்து விட்டனவாக ஜ்யோதிஷர்கள் சொல்லு
கிறார்கள். இவ்விதமான நிமித்தங்கள் தோன்றின்
பெரும்பான்மையாய் அரசனுக்கு மரணமுண்டா
கும், அல்லது பெரிய ஆபத்து ஏதாவது சம்பவிக்
கும் என்பது நூற்கொள்கை. ஆகையால் என் மனம்
உறுதியாக இருக்கும்போதே உன்னை வெகு சீக்கிர
மாகப் பட்டாபிஷேகஞ் செய்துவைக்க வேண்டும்.
இன்றைக்கு இருக்கிற எண்ணம் நாளைக்கு இப்
படியே யிருக்கும் என்று சொல்ல முடியாது. இன்
றைக்குப் புனர்வசு நக்ஷத்திரம். நாளைப் பூசம். இப்
பூச நக்ஷத்திரத்தைத்தான் ஜ்யோதிஷர் பட்டாபி
ஷேகஞ் செய்துவைக்கச் சிறந்ததாகக்கூறுகின்றனர்.
என்மனம் விரைகின்றது. நாளைக்கு உனக்குப் பட்
டாபிஷேகம் செய்ய விரும்புகிறேன்.

''ஆகையால், நீ இன்றிரவு உனது பத்தினியுடன்
தருப்பைப் படுக்கையில், ஒன்றும் புசிக்காமல் உப
வாசமாக இருக்க வேண்டும். உன்னைச்சுற்றி உனது
அன்பர்களும் பந்துக்களும் உன்னைப் பாதுகாக்க
வேண்டும். ஏனெனில், நல்ல காரியத்துக்கு எப்
பொழுதும் விக்கினம் எங்கென்று காத்துக் கொண்
டிருக்கும். என்றைக்குப் பரதன் அவன் மாமன்
வீட்டுக்குப் போனானோ அன்றுமுதல் உன் பட்டாபி
ஷேகத்திற்குத் தக்க காலம் என்பது என்கருத்து.
பரதன் மிக நல்லவன் என்பதில் ஒருவித சந்தேகமு
மில்லை; அவன் தமையனுக்கு அடங்கி நடக்கின்ற
வன்; தரும சிந்தை யுள்ளவன்; தயை தாக்ஷிணிய
முடையவன். ஐம்புலன்களையும் அடக்கியாளுபவன்.
எப்படி யிருந்தாலும் மனிதர்களுடைய மனம் ஒரே
தன்மை யுடையதன்று. பெரியவர்களுடைய மன
மும் ஒரு சமயத்தில் பிறருடைய போதனையால்
மாறும்; ஆகையால்தான் நாளைத்தினமே உனது
பட்டாபிஷேகத்தை நடத்தவேண்டும் என்று நிச்
சயம் பண்ணி யிருக்கிறேன். நல்லது, நீ சீக்கிரமாகச்
சென்று நான் சொன்னபடி செய்வாய்''.

குறுந்தொகை.

[351-வது பக்கத் தொடர்ச்சி]

கோப்பெருஞ்சோழன்] 53 [குறிஞ்சி

பிரியேனென்றும்,விரைவின் வரைந்துகொள்வேன் என்
றும் தெய்வமகளிர் முன்னிலையிற் சூளுரைத்திருந்தும் அவ்
வாறு செய்யாது களவினிலொழுகும் தலைமகனைத் தோழி
தெருட்டியது.

எம்மணங் கினவே, மகிழ்ந, முன்றில்
நனைமுதிர் புன்கின் பூத்தாழ் வெண்மணல்
வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்
செந்நெல் வான்பொரி சிதறி யன்ன
எக்கர் நண்ணிய எம்மூர் வியன்றுறை
நேரிழை முன்கை பற்றிச்
சூரர மகளிரோ டுற்ற சூளே.

(உரை). வேலன் வெறியாடலைச் செய்வதற்காக அழகு
பெற அமைத்த களமெங்கும் செந்நெல்லினது சிறந்த
பொரியைத் தூவினாற்போல வீட்டின் முன்புறத்துள்ள
அரும்புமுதிர்ந்த புன்கமரத்தின் பூக்கள் படிந்துள்ள வெள்
ளிய மணல்மேடுகள் பொருந்திய எம்முடைய ஊரிடத்
துள்ள பெரிய நீர்த்துறையருகில், தலைவியின் முன்கையை
ப்பற்றி அஞ்சத்தக்க தெய்வமகளிர்மேல் ஆணையிட்டு நீ
முன் செய்துகொடுத்த சபதங்கள் எம்மை வருந்தச்செய்
தன.

அணங்குதல் - வருத்துதல், துன்பஞ்செய்தல். பூத்தாழ்-
பூக்கள் தங்கிய. நேரிழை—(அன்மொழி) பெண். சூர் -அச்
சம். அரமகளிர் - தெய்வப்பெண்கள் (nymphs).

'நீ உற்ற சூள் எம்மை அணங்கின' என்றது,''நீ தெய்வத்
தின்மேல் ஆணையிட்டுச் செய்த சத்தியம் தவறினால்
அத்தெய்வம் உனக்கு என்ன தீங்கை இழைக்குமோ என்று
யாங்கள் அஞ்சி வருந்துகின்றோம்'' என்றவாறும்.

மீனெறி தூண்டிலார்] 54 [குறிஞ்சி

தலைமகனது பிரிவு நீட்டித்தவழி ஆற்றாது வருந்திக் கவினழிந்த தலைமகள் தோழியுடன் புலந்து கூறியது.

யானே யீண்டை யேனே; என்னலன்
ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கான நாடனொ டாண்டொழிந் தன்றே.

(உரை). யான் மாத்திரமே இங்குள்ளேன்; எனது கவினெல்லாம், தினைப்புனங் காப்பவரது கவணின் ஒலியைக் கேட்டுப் பயந்து காட்டுயானைகைப்பிடிப்பொழித்து விடுத்த பச்சைமூங்கில், மீன்கவ்விவிட்ட தூண்டிலைப்போல வளைவு நிமிர்ந்து மேலோங்கி எழும் குறிஞ்சிநிலத் தலைவனோடு அங்கே ஒழிந்துபோயிற்று.

ஏனல் - தினை. நிவக்கும் - நிமிர்ந்தோங்கும்.

'யானை கைவிடு பசுங்கழை... தூண்டிலினிவக்கும்' என்றது, மீன் கவ்விக் கீழே இழுத்த தூண்டில் அக் கவ்வுதலொழிந்ததும், நிமிர்ந்தெழுவதுபோல, யானை பிடித்திழுத்து வளைத்த மூங்கில் அதன் கையினின்று விடுபட்டவுடன் மேலெழும்' என்றுவமித்தவாறும்.

" சிலம்பின் வெதிரத்துக் கண்விடு கழைக்கோல்
குரங்கின் வன்பறழ் பாய்ந்தென இலஞ்சி
மீனெறி தூண்டிலி னிவக்கும் " (ஐங்குறு - 278)

என்னும் பாட்டில் இவ்வுவமையும் சொற்றொடரும் அமைந்திருத்தல் காண்க.

நெய்தற் கார்க்கியனார்] 55 [குறிஞ்சி

வரைந்துகொள்ளாமல் களவொழுக்கம் புரிந்துநின்ற தலைமகன் ஒருவழித் தணக்கலுற்றானைத் தோழி, விரைந்து வந்து தலைமகளை வரைந்துகொள்ளுமாறு வற்புறுத்தியது.

மாக்கழி மணிப்பூக் கூம்பத் தூத்திரைப்
பொங்குபிதிர்த் திவலையொடு மங்கு றைஇக்
கையற வந்த தைவர லூதையொ
டின்னா வுறையுட் டாகுஞ்
சின்னாட் டம்மவிச் சிறுநல் லூரே.

(உரை). இந்தச் சிறிய நல்ல ஊரிலுள்ளேமாகிய யாம். பெரிய கழியினிடத்து நீலமணியைப் போன்ற கழிமுள்ளி மலர்கள் குவியும்படி வெள்ளிய அலைகளினிடத்து மிகுதியாகஎழும் நீர்த்திவலைகளை மேகமென எழச்செய்து, துணை பிரிந்து தனித்தார் செயலற்று வருந்தும்படி வந்து தடவுதலைச் செய்யும் பெரிய வாடைக்காற்றினால், துன்பம் விளைக்கும் உறையுளையும் குறுகிய வாழ்நாட்களையும் உடையேம் ஆயினேம், (உன்னைப் பிரிந்தமையால்).

மணி - நீலமணி. தூ - வெண்மை பிதிர்த்திவலை - பிதிராகியதிவலை; இருபெயரொட்டு. திவலையொடு - (உருபு மயக்கம்) திவலையால், திவலையைக்கொண்டு. மங்குல் றைஇ - மேகத்தைச் செய்து; மேலெழூர் திவலைகளை ஊதைக்காற்று மேகமாகச் செய்தலாவது அத்திவலைகள் செறிந்து பார்த்து மேகம்போல மேலெழுந்து செல்லும் படிசெய்தல். தைவரல்-தடவுதல். இன்னா- இன்னாத. உறையுட்டு - உறையுளை உடையது. சின்னாட்டு - சில்நாட்டு, சிலவாகிய நாட்களை உடையது. ஊரிலுள்ளாராகிய தந் தொழிலை ஊரின்மேலேற்றி, 'ஊர் இன்னா உறையுட்டு, சின்னாட்டு' என்றான்.

சிறைக்குடி ஆந்தையார்] 56 [பாலை

உடன்வரத் துணிந்த தலைமகளை மறுத்துத் தனியே பிரிந்துசென்ற தலைமகன் இடைச்சுரத்திற் போகும்போது அச்சுரத்தின் வெம்மையைக்கண்டு இரங்கிக் கூறியது.

வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்,
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கைய ளெம்மோ டுணீஇய
வருகதில், அம்ம, தானே;
அளியளோ வளியளென் னெஞ்சமர்ந் தோளே.

(உரை). வேட்டையாடிய செந்நாய் கிளறியுண்ட இறைச்சியின் மிச்சிலையும், காட்டுமல்லிகைமலர்கள் விழுந்து அழுகிய சிறுகுழிகளிலுள்ள நீரையும் உண்பதற்கு, வளையலையணிந்த கையளாய் எனது நெஞ்சில் நீங்காதிருப்பவள் என்னோடு (இச்சுரத்திடை) வந்திருப்பாளாயின், மிகவும் இரங்கத்தக்கவளே ஆவள்

கிளைத்தூண் - கிளைத்த ஊனாகிய உணவு; கிளைத்த - கிண்டிய, கிளறிய. 'வளையுடைக் கையள், என் னெஞ்சமர்ந் தோளே' என்று கூட்டுக. உணீஇய - உண்ணுதற்கு. வருக - வருவாளாக; இங்கு, வருவாளாயின் என்ற எச்சப் பொருளில் வந்தனது. அளியளோ அளியள் - மிகவும் அளியள்.

சிறைக்குடி ஆந்தையார்] 57 [குறிஞ்சி

தனது தமரால், வெளிப்போகாதபடி வீட்டினகத்தே காவல்செய்யப்பட்டுத் தலைமகனைக் கூடப்பெறாத தலைமகள் தனது ஆற்றாத்துயரத்தைத் தோழிக்குச் சொல்லியது.

பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போகுக தில்ல; கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநா முயற்கே ?

(உரை). தாமரைப்பூவினிடத்துச் சிறிதுநேரம் (தனது துணையாகியபறவை தன்னைவிட்டுநீங்கி) தங்கினும் ஒரு வருடம் கழிந்தாற்போலக் கருதிவருந்தும் நீரிலே (ஆணும் பெண்ணும் இணைபிரியாது) வாழும் மகன்றிற் பறவையைப்போல, பிரிவற்றதும் தடுக்கப்படாததுமான காமவின்பத்தைத் தலைமகனுடன் நுகர்ந்துகொண்டிருந்து என்னுயிர் போகக்கடவதாக. இதுவே நங் கடனென்று அறிந்து நாங்களிருவரும் ஓவாதுகூடிக்கலந்து வாழ்ந்த இவ்வுலகத்தில் (இப்பொழுது இவ்வாறு ஒருவரையொருவர் பிரிந்து) தனித்து வாழநேர்ந்த இப்பொல்லாப்பிரிவு நாம் உயிருடன் வாழ்வதற்கோ ? அன்று.

மகன்றில் - அன்றிற் பறவையைப்போல சிறிது போதும் துணையைப் பிரிந்திருக்கத் தரியாத ஒருசாதி நீர்ப்புள். இதனை, "துணைபிரி மகன்றி லொத்தான்" (சிந்தா-302) என்றதால் அறிக. தண்டா - தண்டாத, தடுக்கப்படாத. தில்ல - அசைநிலை. 'இருவேமாகிய உலகு' என்றது இப் பிறப்பினன்றி முற்பல பிறப்பினும் தாமிருவரும் கணவனும் மனைவியுமாக இருந்தவரென்பது தோன்ற. புன்மை - புன்மையான பிரிவு. உயற்கு - உய்தலுக்கு. உயற்கே - ஏ, வினா.

வர்த்தமானம்

காந்தி அடிகள் :—ஜலால்பூர் ஜில்லாவில் கராடி என்னுமிடத்தில் 4-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 1 மணிக்குப் பம்பாய் அவசரச் சட்டப் பிரகாரம் போலீசாரால் கைதுசெய்யப்பட்டு அன்றிரவே எரவாடா ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அரசாங்கத்தார் விரும்பும் காலம்வரை காவலில் வைக்கப்படுவாராம்.

***

பிரான்ஸில் டாகூர்:—இப்பொழுது பிரான்ஸில் தங்கியிருக்கும் ரவிந்தரநாத டாகூர் ராய்ட்டர் பிரதிநிதிக்குக் கூறியதாவது:—'நான் இப்பொழுது எனது கவனம் முழுதையும் கலைத்துறையில் செலுத்தியுள்ளேன். அரசியலில் என் கவனம் இப்பொழுது நாடுவதில்லை. இந்தியப் பத்திரிகைகளையும் நான் படிப்பதில்லையாதலால் இந்திய அரசியல் நிலைமையைப் பற்றிய தொன்றும் எனக்குத் தெரியாது'.

***

புதியபோலீஸ் கமிஷனர்:—இப்பொழுது, சென்னை போலீஸ் கமிஷனரான மிஸ்டர் C. B. கன்னிங்ஹாம் சென்னை இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். எனவே வால்டயரில் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலாயிருந்த மிஸ்டர் E. J. ராலின்ஸன் சென்னை போலீஸ் கமிஷனராக நியமனம் பெற்றார். அவர் மே மாதம் 3-ந் தேதி அன்று கமிஷனர் பதவியை ஏற்றார்.

***

ஸர்வதேசத்தொழிலாளர் மஹாநாடு:—ஜினேவாவில் கூடும் ஸர்வதேசத் தொழிலாளர் மஹாநாட்டிற்கு, இந்தியா கவர்ன்மெண்டின் சார்பாக ஸர் அதுல் சடர்ஜியும், டாக்டர் பிராஞ்சுபேயும் பிரதிநிதிகளாய் நியமனம் பெற்றிருக்கின்றனர். உதவிப் பிரதிநிதியாக A. லநீப் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்தியச் சுரங்க இலாக்காத் தலைவர் J. H. லாங்கும், இந்தியாக் கார்யாலய அங்கத்தினரான G. G. டிக்ஸனும் யோசனை கூறுபவர்களாக நியமிக்கப் பெற்றிருக்கின்றனர்.

முதலாளிகளின் பிரதிநிதிகளாக, அமிர்தலால் ஓஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு யோசனை கூற இந்திய வர்த்தக சபையினர்களான ஸ்ரீமான்களான முகர்ஜி, ராம்ஜிதாஸ், மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

தொழிலாளர் சார்பாக ஸ்ரீமான் S. C. ஜோஷியும், அவருக்கு யோசனை கூற, ஸ்ரீமான்களான B. சிவராவ், K. C. ராய்சவுத்திரி, மகமத் உமார் ஆபவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ V. S சாஸ்திரியார்:—மகாகனம் ஸ்ரீ V. S. சீநிவாஸ சாஸ்திரியார் இம்மாதம் முதல்தேதி லண்டன் போய்ச் சேர்ந்தார் இந்திய லேபர் கமிஷன் தலைவரான விட்லியும், இந்தியா மந்திரியின் சார்பாக அக்கார்யாலய அதிகாரிகளும், இந்திய ஹை கமிஷனரும் துறைமுகம் சென்று சாஸ்திரியாரை வரவேற்றனர். சிலகாலம் அவர் லண்டனில் தங்குவார் என்று தெரிகின்றது.

***

ஸர் பி. ராமநாதன்:—இலங்கையின் பிரபல மனிதர்களில் ஒருவரான ஸர். பொன்னம்பலம் ராமநாதன் அவர்கள், தமது மனைவி, மகள், மருமகன் ஆயவர்களுடன் சென்றவாரம் இங்கிலாந்திற்குப் பிரயாணமானார். சிலமாதகாலம்வரை அங்கேயே அவர் தங்கியிருப்பார் என்றும் அவர் இலங்கை அரசியல் திருத்தம் சம்பந்தமாக, பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுடன் பேசுவதற்காகச் சென்றுளார் என்றும் தெரிகின்றது.

***

ஜர்மனியின் வறுமை நிலை:—'ஜெர்மனியில் சைலேஷியா என்னும் பகுதியில் ஜனங்கள் வறுமையால் கஷ்டப்படுகின்றனராம். அங்கு ஒருவன் தனது மூன்று குழந்தைகளை 50 பவுனுக்கு விற்றுவிட்டானாம். மற்றொரு தந்தை நாலுவயதுள்ள ஒரு பெண்குழந்தையைத் தான் கொடுக்கவேண்டிய கடனுக்காக ஒரு வியாபாரியினிடம் கொடுக்கச் சம்மதித்தானாம். ஆனால் போலீசார் தடுத்துவிட்டனராம். ஒரு தொழிலாளி தனது 9-குழந்தைகளை ஏலம் கூறினானாம்.

***

வேலையில்லா நிலை :—சுயவாட்சி வாக்குரிமை பெலாம் பெற்ற ஆஸ்திரேலியாச் செய்தி:—"வட ஆஸ்திரேலியாவில் வேலையில்லாது பலர் கஷ்டப்படுகின்றனர். பலர் அரசாங்க உத்தியோகஸ்தர் வீடுகளைக் கைப்பற்றி அவ்வீடுகளின் வெளிமுகப்பில் படுப்பதும் தூங்குவதுமாய் இருக்கின்றனர். இந்நிலையினால் ஏதாவது குழப்பம் நேருமோவென அஞ்சி அரசாங்கத்தார் பொதுஜனங்கள் பலரை விசேஷ போலீசாராகச் சேர்த்துத் தந்தி ஆபீஸ்களிலும் தந்திலயன் செல்லுமிடங்களிலும் காவல் போட்டிருக்கின்றனர். பாங்குகளும் காக்கப்படுகின்றன. பாங்கு உத்தியோகஸ்தர்கள் பாங்குகளிலேயே இருந்துவருமாறு உத்திரவிடப்பட்டிருக்கின்றனர்."

R. சுப்பிரமணிய ஐயர் இயற்றிய தமிழ்ச் சட்டப் பிரசுரங்கள்.

பெரிய ஹிந்து லா ரூ. 2, புதிய விவகார சிந்தாமணி என்கிற தஸ்தாவேஜுகளின் சட்டம் ரூ. 2-8, கிரிமினல் ப்ரோஸீஜர் கோட் என்கிற க்ரிமினல் லா ரூ. 3, புது ஹிந்து தர்மஸ்தாபனச் சட்டம் ரூ. 1, தர்ம சொத்துகளின் டிரஸ்டி ஆக்ட்டு அணு 14, நில ஆக்கிரமிப்புச் சட்டம் அணு 4, கிராம முனிசீப் மான்யூல் கிராமச் சுகாதாரம் ரூ. 1-10, லோக்கல் போர்ட் ஆக்ட் ரூ. 1-8, மகமதியர் லா ரூ. 2, புது ஸ்டாம் பாக்ட் அணு 12, புது இன்கம்டாக்ஸ் (வருமான வரிச் சட்டம்) ரூ. 1, எஸ்டேட் லாண்ட் ஆக்ட் (ஜமீன்குடி நிலச் சட்டம்) ரூ. 1-4, கால நிர்ணயச் சட்டம் அணு 8, ரெஜிஸ்ட்ரேஷன் சட்டம் அணு 10, சிவில் லா என்கிற சிவில் ப்ரோஸீஜர் கோட் ரூ. 3, இந்தியன் பினல்கோட் சட்டம் ரூ. 3, புதிய கிராமப் பஞ்சாயத்து ஆக்ட் ரூ 1-4, பரம்பரையான கிராம ஊழியம் அல்லது உத்தியோகங்களைக் குறித்தச் சட்டம் ரூ. 1, இந்து தேசத்துச் சாட்சி ஆக்ட் ரூ. 1.

வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்கள்:—

சுகந்த புஷ்பம் ரூ. 1, சாருலோசனா (முதற் பாகம்) ரூ. 1, கோபாலரத்தனம் அணு 14, வீர வஸந்தா அணு 8, மாதவமணி அணு 3, வைதேகி (2-பாகங்கள்) ரூ. 2-8, பத்மசுந்தரம் 2-பாகம் ரூ. 2-8, ராதாமணி 2-பாகம் ரூ. 2, சண்பக விஜயம் ரூ. 1-12, கௌரி முகுந்தன் ரூ. 1-12, நவநீதகிருஷ்ணன் ரூ. 2.

V. S. T. Swamy Novel Depot. VEPERY, MADRAS.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :— சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்லைன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமோம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பைபிண்டு செய்யாதது	8	0	0	பைபிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ பில்ட்	9	8	0	காலிகோ பில்ட்	11	0	0
ஆப்லெதர் பில்ட்	10	0	0	ஆப்லெதர் பில்ட்	11	8	0

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது விலை ரூ. 1–8.

திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுத்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷூயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

MANAGER:—

KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கப்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

உள்நாடு சந்தா		ரூபா	2 0 0
வெளிநாடு	,,	,,	2 8 0
தனிப்பிரதி விலை		அணா	0 4 0

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

ரூ. 500 இனும்! எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,

தபாற்பெட்டி 99. சென்னை.

அமிர்த குண போதினி

5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

ஆங்கில ஆசான்

10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலை வீதி, மதராஸ்

கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

பால காண்டம்	...	ரூ	5.
அயோத்தியா காண்டம்		ரூ.	5.
ஆரண்ய காண்டம்	...	ரூ.	4.
கிஷ்கிந்தா காண்டம்	...	ரூ.	4-8.
சுந்தர காண்டம்	...	ரூ.	5.

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார் போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)